بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحْمَدُہٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِہِ الْکَرِیْمِ وَعَلٰی عَبْدِہِ الْمَسِیْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّۃٌ

தொகுதி 10

இதழ் 5

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ரஜப் 29 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - ஸுல்ஹ் 30 ★ 30 ஜனவரி 2025


## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَآ اِنَّكَ مَنۡ تُدۡخِلِ النَّارَ فَقَدۡ اَخۡزَيۡتَهٗ ‌ؕ وَمَا لِلظّٰلِمِيۡنَ مِنۡ اَنۡصَارٍ ○

**பொருள்**

எங்கள் இறைவா! நீ நெருப்பில் நுழையச் செய்தவரை நிச்சயமாக இழிவுப்படுத்தி விட்டாய். மேலும் அநீதி இழைப்பவர்களுக்கு உதவி செய்பவர் எவரும் இல்லை.

(ஆலி இம்ரான் - 193)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# அஹ்மதிய்யத்தின் தலைமையகம் காதியான் தாருல் அமானில் 129-வது ஆண்டு மாநாடு வெற்றிகரமாகவும் அருளுக்குரியதாகவும் நடந்து முடிந்தது

## ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் யூ.கே, இஸ்லாமாபாத்தில் இருந்து ஙபஅ மூலமாக ஈமானை வலுவூட்டக் கூட மாநாட்டு நிறைவுரை ஆற்றினார்கள்

### காதியான் ஜல்ஸா 2024 அறிக்கை
### (பாகம் - 2)

இரண்டாவது நாள் இரண்டாவது அமர்வு

இந்த அமர்வு மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது ஸாஹிப் ஹாஃபிழாபாதி, செகரட்டரி மஜ்லிஸ் கார்பர்தாஸ் பஹிஷ்தி மக்பரா காதியான் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. அன்பிற்குரிய முஹம்மது யஹ்யா, காதியான் ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர் திருக்குர்ஆன் திலாவத்தை ஓதினார்.மேலும் மதிப்பிற்குரிய மவ்லவி அப்துல் வகீல் நியாஸ் ஸாஹிப், நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத், தென் இந்தியா காதியான் அவர்கள் அதன் மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார்கள். அதன் பிறகு மதிப்பிற்குரிய யாஸர் அஹ்மது நாயிக் அவர்கள் ஹமேன் உஸ் யார் ஸே தக்வா அதா ஹே என்ற வரிகளுடன் துவங்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவிதை வரிகளை தமது அழகிய குரலில் பாடலாக பாடினார்கள்.

கூட்டத்தின் முதல் சொற்பொழிவை மதிப்பிற்குரிய கே. தாரிக் அஹ்மது ஸாஹிப், அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் நூருல் இஸ்லாம் காதியான் அவர்கள் உலகப் போரின் தீய விளைவுகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய வழிகாட்டல்கள் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். சூரா பனீ இஸ்ராயீலுடைய, வசனம் 16 ஐ திலாவத் செய்து அதன் மொழியாக்கத்தை எடுத்துக் கூறிய பிறகு முன்னறிவிப்புகள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இரண்டு மேற்கோள்களை அன்னார் எடுத்து வைத்தார்கள். மேலும் அன்னார் கூறினார்கள்: இன்றைய உலகில் ஒவ்வொரு மனிதனும் நிம்மதியின்மைக்கு இரையாகி இருக்கின்றான்.மேலும், சாந்தியும், சமாதானமும் சீர்கெட்டுக் கொண்டிருப்பதை தனது கண்களாலேயே பார்த்துக் கொண்டிருக்கின்றான்; மேலும் காதுகளால் செவியேற்றுக் கொண்டிருக்கின்றான். உலகின் பல்வேறு பகுதிகளில் போரின் நெருப்பு மூண்டு விட்டது. இன்றைய காலத்தில் இறைவனின் ஒரு தண்டனையின் வெளிப்பாடு மற்றுமொரு உலகப் போரின் வடிவில் வெளிப்படக் கூடும். அதுபோன்ற போரின் தீய விளைவுகளும், அழிவுகளும் தற்போதைய சந்ததிகளுடன் மட்டுமே நிலை நிற்கப்போவதில்லை என்பதில் எவருக்கும் எந்த ஐயமுமில்லை. உண்மையில் அபாயகரமான விளைவுகள் எதிர்வரும் பல தலைமுறைகள் வரை வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இறுதி காலத்தின் இமாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் முஸ்லிம்களையும், உலகத்தையும் மீண்டும் மீண்டும் எச்சரிக்கை செய்து கொண்டே இருந்தார்கள். அவர்கள் தவ்பா செய்யவில்லையென்றால், உண்மையான இறைவன் மீதும், அவனது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீதும், காலத்தின் இமாமின் மீதும் ஈமான் கொள்ளவில்லையென்றால் பின்னர் அல்லாஹ்வின் கடுமையான தண்டனையால் பிடிக்கப்படுவார்கள் என்று அன்னார் (அலை) எச்சரிக்கை செய்தார்கள். தற்போது இறைத் தண்டனையின் வெளிப்பாடு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்தக் காலத்தின் சித்திரத்தை வடித்தவாறு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மெய்யாகவே கூறுகின்றேன். இந்த நாட்டின் நிலைமையும் மிகவும் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. நூஹின் காலம் உங்களின் கண்களுக்கு முன்னால் வந்து விடும். மேலும் லூத்தின் பூமியின் சம்பவத்தை நீங்கள் கண்கூடாக கண்டு கொள்வீர்கள். ஆயினும் இறைவன் தண்டிப்பதில் மென்மை காட்டுபவன் ஆவான். தவ்பா செய்யுங்கள்; அப்போதுதான் உங்கள் மீது கருணை காட்டப்படும். எவர் இறைவனை விட்டுவிடுகின்றாரோ அவர் மனிதரல்ல ; மாறாக அவர் ஒரு புழு ஆவார். அவனுக்கு அஞ்சாதவர் உயிருள்ளவர் கிடையாது; மாறாக மரணித்தவர் ஆவார்.

(ஹக்கீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின், தொகுதி 22, பக்கம் 229)

மனிதன் இறைவன் பக்கம் குனிவதையும், இறைவனை தனது உதவியாளனாக ஆக்கிக் கொள்வதையும் தவிர்த்து அவனுக்கு மூன்றாம் உலகப் போரின் தீய தாக்கங்களிலிருந்து தப்பிப்பதற்கு வேறு வழியே கிடையாது. கடந்த இரண்டு பத்தாண்டுகளாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகை மூன்றாம் உலகப் போரின் அபாயங்களிலிருந்து எச்சரித்து வருகின்றார்கள். மேலும் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு துஆக்களுடன் அவர்களது சீர்திருத்தத்தின் பக்கமும் கவனமூட்டி வருகின்றார்கள். அப்போதுதான் ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த உலகளாவிய அழிவுகளின் அபாயகரமான விளைவுகளிலிருந்து தங்களையும், தமது எதிர்கால சந்ததிகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் கவனமூட்டியுள்ளார்கள்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகம் மிகவும் அபாயகரமான அழிவின் பக்கம் மிகவும் வேகமாக சென்று கொண்டிருக்கின்றது. முஸ்லிம்களிடத்திலும் நீதி இல்லை ;முஸ்லிம் அல்லாதவர்களிடமும் நீதி இல்லை. இன்னும் கூறப்போனால் அனைவரும் அநீதிகளின் உச்சத்தை தொட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே இதுபோன்ற நேரத்தில் உலகின் கண்களை திறப்பதிலும், அநீதிகளிலிருந்து விலகியிருப்பதன் பக்கம் கவனமூட்டி அழிவின் கிடங்கில் உலகம் விழுவதிலிருந்து உலகத்தை பாதுகாப்பதிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தால் மட்டுமே பங்களிப்பை வழங்க முடியும். (தொடரும்.....)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஸரிய்யா உக்காஷா பின் மிஹ்ஸன் &ஸரிய்யா முஹம்மது பின் மஸ்லமா & ஸரிய்யா ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் & பனூ ஸுலைமை நோக்கி அனுப்பப்பட்ட ஸரிய்யா ஸைது பின் ஹாரிஸா & ஈஸ் பகுதியை நோக்கி அனுப்பப்பட்ட ஸரிய்யா ஸைது பின் ஹாரிஸா & பனூ லஹ்யான் போர் மற்றும் ஹிஜ்ரீ 6-ம் ஆண்டு நடைபெற்ற இன்னும் சில போர்கள் மற்றும் ஸரிய்யாக்களின் சூழல்கள் மற்றும் சம்பவங்களைக் குறித்த விரிவான விளக்கம்**

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு இது குறித்து தெரியாது; ஆனால் நம்பிக்கையாளர்களின் கூட்டத்தினர் ஓர் உயிரைப் போன்றவர்கள் ஆவர்; அவர்களில் ஒருவர் ஒரு நிராகரிப்பாளருக்கு அடைக்கலம் கொடுத்து விட்டால் பின்னர் அதற்கு கண்ணியமளிப்பது கடமையாகும்**
**பின்னர் அன்னார் (ஸல்) ஸைனப் (ரலி) அவர்களின் பக்கம் கவனம் செலுத்தியவாறு கூறினார்கள்:**
**நீர் எவருக்கு அடைக்கலம் கொடுத்தீரோ அவருக்கு நாமும் அடைக்கலம் கொடுக்கின்றோம்**

**வெளிப்படையில் இஸ்லாமிய உலகிற்கு எதிராக அவர்களின் எண்ணங்கள் அபாயகரமானவையாகும். மேலும் இந்த அடிப்படையில் எந்தவொரு நாடும் பாதுகாப்பானதாக இல்லை. பாகிஸ்தானிற்காகவும் இந்த அடிப்படையில் துஆ செய்யுங்கள்; ஈரானிற்காகவும் ஏனைய நாடுகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக. மேலும் பிரிவினைவாதமும் அதிகார வேட்கையும் அவர்களிடமிருந்து ஒழியட்டுமாக ; மேலும் இவர்கள் ஒன்றுபடட்டுமாக!**
**மதிப்பிற்குரிய அமீர் ஹஸன் மர்டானீ ஷஹீத் மற்றும் மலேசிய ஜமாஅத்தின் முபல்லிஃக் மவ்லானா அப்துஸ் ஸத்தார் ஸாஹிப் ஆகியோரின் நற்குறிப்பும் ஜனாஸா காயிப் தொழுகையும்**

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 டிசம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **20 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

போர்கள் மற்றும் ஸரிய்யாக்களின் சம்பவங்களின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சம் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பாக ஸரிய்யா உக்காஷா பின் மிஹ்ஸினைப் பற்றிய குறிப்பும் வரலாற்றில் கிடைக்கின்றது. இந்த உக்காஷா பின் மிஹ்ஸின் ஸரிய்யா கம்ர் மர்ஸூக் தரப்பிலிருந்து அமைந்திருந்தது. இந்த ஸரிய்யா ரபீயுல் அவ்வல், ஹிஜ்ரீ 6-ம் ஆண்டு நிகழ்ந்தது. (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 6, பக்கம் 77, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஒரு முஹாஜிர் ஸஹாபியான உக்காஷா பின் மிஹ்ஸின் (ரலி) அவர்களை 40 முஸ்லிம்களுக்கு அதிகாரியாக நியமித்து பனீ அஸது கோத்திரத்துக்கு எதிராக போரிட அனுப்பி வைத்தார்கள். இந்தக் கோத்திரம் அந்த நேரத்தில் ஒரு நீரூற்றுக்கு அருகில் முகாமிட்டிருந்தது. அந்த நீரூற்றின் பெயர் கம்ர் ஆக இருந்தது. அது மதீனாவிலிருந்து மக்காவின் திசையில் சில நாட்கள் பயணத் தொலைவில் அமைந்திருந்தது. அவர்களை தீங்கிழைப்பதிலிருந்து தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காக உக்காஷா குழுவினர் வேக வேகமாக பயணம் செய்து கம்ர் என்ற இடத்திற்கு அருகில் சென்றடைந்தனர். அதாவது அந்த மக்கள் தீட்டியிருந்த சதித் திட்டத்திலிருந்து அவர்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காக சென்றடைந்தனர். அந்தக் கோத்திரத்தின் மக்கள் முஸ்லிம்களின் வருகையைப் பற்றிய செய்தி கிடைத்ததும் அங்கும், இங்கும் சிதறுண்டு விட்டனர். அதனால் உக்காஷா மற்றும் அவரது தோழர்கள் மதீனாவை நோக்கி திரும்பி வந்தனர். மேலும் எந்தப் போரும் நிகழவில்லை. ( ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 666)

இதே போன்று ஸரிய்யா முஹம்மது பின் மஸ்லமாவைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. இந்த ஸரிய்யா ரபீயுஸ் ஸானீ, ஹிஜ்ரீ 6-ம் ஆண்டு நிகழ்ந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை துல் கஸ்ஸா எனும் இடத்தில் வசித்து வந்த பனூ ஸஃலபா மற்றும் பனூ குவால் கோத்திரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். துல் கஸ்ஸா என்ற இடம் மதீனாவில் இருந்து ரபஸஃவின் வழிப் பாதையில் 24 மைல் தொலைவில் அமைந்திருக்கின்றது. (அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅது, தொகுதி 2, பக்கம் 65, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களுக்கு பத்து நபர்களைக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். இந்த ஜமாஅத் இரவு நேரத்தில் அங்கு சென்றடைந்தது. ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா மற்றும் அன்னாரின் தோழர்களை அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த நிலையில் அந்த மக்கள் சுற்றி வளைத்து விட்டனர். மேலும் எதிரிகள் நூறு பேர் இருந்தனர். எதிரிகள் முஸ்லிம்களை அம்புகளால் சுற்றி வளைக்கும் வரை முஸ்லிம்களுக்கு அது குறித்து தெரியவில்லை. ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் வேகமாக எழுந்தார்கள். மேலும், அன்னாரிடத்தில் வில் இருந்தது. அன்னார் (ரலி) தமது தோழர்களிடம் ஆயுதங்களை ஏந்திக் கொள்ளுங்கள் என்று உரத்தக் குரலில் கூறினார்கள். அவர்கள் அனைவரும் வேகமாக எழுந்து விட்டனர். இரவின் ஒரு நேரத்தில் அம்பு எய்யப்பட்டுக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அம்பு எய்தல் என்பது பரஸ்பரம் நிகழ்ந்தது. பின்னர் காட்டுவாசிகள் ஈட்டிகளால் தாக்குதல் நடத்தி மற்ற அனைவரையும் ஷஹீதாக்கி விட்டனர். மேலும் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் காயமுற்று கீழே விழுந்து விட்டார்கள். அன்னார் (ரலி) அசைய முடியாத அளவிற்கு அன்னாரின் கணுக்காலில் காயம் ஏற்பட்டு விட்டது. மேலும், எதிரிகள் அன்னாரின் ஆடையை அவிழ்த்து விட்டு சென்று விட்டனர். ஒரு முஸ்லிம் நபர் கொலையுண்டவர்களை கடந்து சென்றார். மேலும் இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறினார். ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அதைக் கேட்ட போது அசைந்தார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 6, பக்கம் 79, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களின் தோழர்களின் ஷஹாதத்திற்கு காரணமானவர்களை பழிவாங்குவதற்காக நிகழ்ந்த ஒரு ஸரிய்யாவைப் பற்றியும் குறிப்பு கிடைக்கின்றது. இது ஸரிய்யா ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) என்றழைக்கப்படுகின்றது. இதன் விளக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த நிலைமைகளைப் பற்றி தெரிய வந்தபோது, அதாவது, துல் கஸ்ஸாவில் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களின் தோழர்களின் ஷஹாதத் பற்றிய தகவல் கிடைத்தபோது, அன்னார் (ஸல்) குறைஷியர்களை சேர்ந்த மற்றும் பெரும் ஸஹாபிகளில் கணக்கிடப்படக் கூடிய அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களை

முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களுக்காக பழிவாங்குவதற்காக துல் கஸ்ஸாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும், பனூ ஸஃலபாவின் மக்கள் மதீனாவின் சுற்று வட்டாரத்தில் தாக்குதல் தொடுப்பதற்கு எண்ணம் கொண்டுள்ளார்கள் என்ற தகவல் இந்த இடைப்பட்ட நேரத்தில் கிடைத்திருந்தது. எனவே அன்னார் (ஸல்) அபூ உபைதா (ரலி) அவர்களின் தலைமையில் செயல்திறன் மிக்க 40 நபர்களைக் கொண்ட ஒரு ஜமாஅத்தை அனுப்பி வைத்தார்கள். மேலும், இரவில் பயணம் செய்து காலை நேரத்தில் அங்கு சென்றடைய வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். அபூ உபைதா (ரலி) அவர்கள் கட்டளையை செயல்படுத்தியவாறு சரியாக ஸுபுஹ் தொழுகை நேரத்தில் சென்றடைந்து அவர்களை சுற்றி வளைத்து விட்டார்கள். அவர்கள் இந்த திடீர் தாக்குதலால் பதற்றமடைந்து சிறிய அளவிலான எதிர்ப்பிற்கு பிறகு தப்பியோடி விட்டனர். மேலும், அருகில் இருந்த மலையில் சென்று ஒளிந்து கொண்டனர். அபூ உபைதா (ரலி) அவர்கள் போர் செல்வங்களை கைப்பற்றினார்கள். மேலும் மதீனாவை நோக்கி திரும்பி வந்தார்கள்.

இந்த போரில் எந்த இரண்டு ஸஹாபிகளைக் குறித்த குறிப்பு இடம் பெற்றுள்ளதோ அவர்கள் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) மற்றும் அபூ உபைதா பின் ஜர்ராஹ் ( ரலி) ஆவர். அவர்கள் இருவரும் மாபெரும் ஸஹாபிகளை சேர்ந்தவர்களாக இருந்தனர். முஹம்மது பின் மஸ்லமா (ரலி) தமது தனிப்பட்ட நற்குணங்கள் மற்றும் திறமைகளால் மட்டுமின்றி கஅப் பின் அஷ்ரப் என்பவனின் கொலையிலும் கதாநாயகனாக இருந்தார்கள். ஏனெனில், அந்த குழப்பவாதி அன்னாரின் கரங்களாலேயே தனது தீய முடிவை எட்டினான். முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அவ்ஸ் எனும் அன்ஸார் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் அன்னாருடைய குறிப்பான நம்பிக்கைக்குரியவராக கருதப்பட்டார்கள். ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொதுவாக அன்னாரையே அதிகாரிகளுக்கு எதிரான புகாரை விசாரிப்பதற்காக அனுப்பி வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு முஸ்லிம்களிடத்தில் உள்ளார்ந்த குழப்பங்களுக்கான வாசல் திறந்தபோது ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் தமது வாளை ஒரு கல்லின் மீது அடித்து உடைத்து தமது கரத்தில் ஒரு தடியை மட்டுமே ஏந்திக் கொண்டார்கள். மேலும், ஒருவர் அதற்கான காரணத்தை அன்னாரிடம் கேட்டபோது, முஸ்லிம்களுக்குள் பரஸ்பர கொலைக்கான வாசல் திறந்து விடும்போது நீங்கள் வாளை உடைத்து விட்டு ஓர் அறையில் அதன் தளம் அமைந்திருப்பதைப் போன்று வீட்டில் அமைதியாக அமர்ந்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை தாம் செவியுற்றதாக அன்னார் (ரலி) கூறினார்கள். இந்தக் கட்டளை என்பது அநேகமாக முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் அல்லது அந்தக் குழப்பத்திற்கும் மட்டுமானதாக இருந்தது. ஏனெனில், சிலநேரங்களில் உள்ளார்ந்த குழப்பங்களை எதிர்த்து சண்டையிடுவது என்பதும் ஒரு உயர்தரமான மார்க்க தொண்டின் வடிவத்தை கொண்டிருக்கின்றது.

இரண்டாவது ஸஹாபி, ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களாக இருந்தார்கள். அன்னாரும் மாபெரும் ஸஹாபியாக இருந்தார்கள்; மேலும் குறைஷியராக இருந்தார்கள். அன்னாரின் உயர் அந்தஸ்து இதிலிருந்து வெளிப்படுகின்றது: அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு அமீனுல் மில்லத் (மார்க்கத்தின் நம்பிக்கைக்குரியவர் என்ற பட்டத்தை சூட்டியுள்ளார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் எந்த இரண்டு ஸஹாபிகளை கிலாஃபத்திற்கு தகுதி படைத்தவர்களாக கருதினார்களோ அவர்களில் ஒருவராக அன்னார் (ரலி) இருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் . ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்து ஷஹீதாகி விட்டார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 668 - 669)

அடுத்து ஒரு ஸரிய்யா இருக்கின்றது. அது பனூ ஸுலைமை நோக்கி அனுப்பப்பட்ட ஸரிய்யா ஸைது பின் ஹாரிஸா (ரலி) என்பதாகும். இது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ரபீயுல் அவ்வல் மாதத்தின் இறுதியில் ஹிஜ்ரீ 6-ம் வருடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் விடுதலை செய்த தமது அடிமை ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் சில முஸ்லிம்களை பனீ ஸுலைம் கோத்திரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். இந்தக் கோத்திரம் அக்காலத்தின் நஜதுடைய பகுதியில் ஜமூம் என்ற இடத்தில் வசித்து வந்தது. மேலும் ஒரு நீண்ட காலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக சண்டையிடுவதில் ஈடுபட்டு வந்தது. ஆக, அகழ்ப் போரின் போதும் கூட அந்தக் கோத்திரம் முஸ்லிம்களுக்கு எதிராக முக்கியப் பங்காற்றியது. ஸைது பின் ஹாரிஸா (ரலி) மற்றும் அன்னாரின் தோழர்கள் மதீனாவில் இருந்து சுமார் ஐம்பது மைல் தொலைவில் இருந்த ஜமூம் என்ற இடத்தை அடைந்தபோது அவர்கள் அந்த இடத்தை காலியாக இருப்பதைக் கண்டனர். ஆனால், இஸ்லாத்தின் எதிரிகளைச் சார்ந்த முஸைனஃ எனும் கோத்திரத்தைச் சேர்ந்த ஹலீமா என்ற பெயர் கொண்ட ஒரு பெண்ணின் மூலமாக அந்நேரத்தில் பனூ ஸுலைம் கோத்திரத்தின் ஒரு பகுதியினர் எங்கு தமது கால்நடைகளை மேய்த்து வந்தார்களோ அந்த இடத்தை அறிந்து கொண்டனர். ஆக, அந்த தகவலில் இருந்து பயனடைந்தவாறு ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அந்த இடத்தை சோதனையிட்டார்கள். அந்த திடீர் தாக்குதலால் பதற்றமடைந்து பெரும்பாலான நபர்கள் அங்கும், இங்கும் தப்பியோடி சிதறுண்டு விட்டார்கள். ஆனால், சில கைதிகளும், கால்நடைகளும் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்து விட்டன. அவர்களை அழைத்துக் கொண்டு மதீனாவை நோக்கி திரும்பி வந்து விட்டனர். தற்செயலாக அந்தக் கைதிகளில் ஹலீமா அவர்களின் கணவரும் இருந்தார். மேலும், அவர் போர் எதிரியாக இருந்தார். போரிடக் கூடியவராக இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹலீமா என்ற பெண்ணின் அந்த உதவியின் காரணமாக அதாவது, அவர் வழங்கிய தகவல்களின் காரணமாக ஹலீமாவை ஈட்டுத் தொகை எதுவும் பெறாமல் விடுதலை செய்தது மட்டுமின்றி அவருடைய கணவரையும் கருணையின் அடிப்படையில் விட்டு விட்டார்கள். மேலும் ஹலீமாவும், அவரது கணவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் தங்களது நாட்டிற்கு திரும்பிச் சென்று விட்டனர். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 669)




இதே போன்று ஈஸ் என்ற பகுதியின் பக்கம் அனுப்பப்பட்ட ஸரிய்யா ஸைது பின் ஹாரிஸா (ரலி) பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. அதன் விளக்கம் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமாதியல் ஊவ்லா மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு அன்னாரை அதாவது ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை நூற்றி எழுபது ஸஹாபிகளுக்கு தலைவராக நியமித்து மீண்டும் மதீனாவில் இருந்து அனுப்பி வைத்தார்கள். இந்தப் போருக்கான காரணமாக வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடியவர்கள் இதனை எழுதியுள்ளனர்: சிரியாவின் புறமிருந்து மக்கத்து குறைஷியர்களின் ஒரு வணிகக் குழு வந்து கொண்டிருந்தது. அதனை தடுத்து நிறுத்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தப் படையை அனுப்பி வைத்தார்கள். குறைஷியர்களின் குழு எப்போதும் ஆயுதம் ஏந்தி இருந்தது. மேலும், மக்கா மற்றும் சிரியாவிற்கிடையில் சென்று வரும் போது அவர்கள் மதீனாவிற்கு முற்றிலும் அருகில் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக அவர்களின் தரப்பிலிருந்து எப்போதும் ஆபத்து நிலவி வந்தது. இது மட்டுமின்றி….., இந்தக் குழு எங்கெங்கெல்லாம் கடந்து சென்றதோ அங்கு அரேபிய கோத்திரங்களை முஸ்லிம்களுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்து வந்தது. அதன் காரணமாக முழு நாட்டிலும் முஸ்லிம்களுக்கு எதிராக பகைமைக்கான ஓர் அபாயகரமான நெருப்பு மூட்டப்பட்டிருந்தது. எனவே அவர்களை தடுத்து நிறுத்துவது அவசியமாக இருந்தது. எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் குழுவைக் குறித்த தகவல் கிடைக்கப் பெற்றதும் ஸைது பின் ஹாரிஸா அவர்களை அதன் பக்கம் அனுப்பி வைத்தார்கள். மேலும், அன்னார் (ரலி) மிகவும் எச்சரிக்கையுடன் ஒளிந்து மறைந்து முன்னேறினார்கள். எந்த அளவுக்கென்றால் ஈஸ் என்ற இடத்தில் அந்தக் குழுவை பிடித்து விட்டார்கள். ஈஸ் என்பது மதீனாவில் இருந்து நான்கு நாட்கள் பயணத் தொலைவில் கடலின் பக்கம் அமைந்துள்ள ஓரிடத்தின் பெயராகும். இது திடீர் தாக்குதலாக இருந்ததன் காரணத்தால் வணிகக் குழுவினரால் முஸ்லிம்களின் தாக்குதலை தாக்குப் பிடிக்க முடியவில்லை. மேலும், தங்களது பொருட்களை எல்லாம் விட்டு விட்டு தப்பியோடி விட்டனர். ஸைது (ரலி) அவர்கள் சிலரை சிறைப் பிடித்தார்கள். மேலும் வணிகக் குழுவின் பொருட்களை தமது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு மதீனாவை நோக்கி புறப்பட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

சமூகத்தில் ஆஜரானார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 668 - 669))

இந்த சம்பவங்களில் அபூல் ஆஸ் பின் ரபீஃ அவர்கள் கைதியாக்கப்பட்டதும் பின்னர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டது குறித்தும் குறிப்பு கிடைக்கின்றது. அதன் விளக்கம் இவ்வாறு இடம் பெற்றுள்ளது; அதாவது இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்கள்: மக்கா வெற்றி கொள்ளப்படுவதற்கு முன்னர் அபூல் ஆஸ் பின் ரபீஃ வியாபார நோக்கத்துடன் தமது செல்வத்தையும், குறைஷிய மக்களின் செல்வத்தையும் எடுத்துக் கொண்டு சிரியாவை நோக்கி புறப்பட்டார்கள். வணிகத்தை முடித்துக் கொண்டு, வணிகக் குழுவை அழைத்துக் கொண்டு திரும்பி வந்த போது இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ஒரு படையை அவருக்கு எதிர்கொள்ள நேரிட்டது. அவரிடத்தில் இருந்த அனைத்து பொருட்களையும் ஸஹாபிகள் தமது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டார்கள். மேலும் வணிகக் குழுவினரை கைது செய்து விட்டார்கள்.

இப்னு ஸஅது அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அபூல் ஆஸ் பின் ரபீஃயும் இடம் பெற்றிருந்த அந்த வணிகக் குழுவை ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கைது செய்தார்கள்; மேலும், அவர்களை மதீனாவிற்கு அழைத்து வந்தார்கள்.

இமாம் ஸுஹ்ரீ மற்றும் உக்பா ஆகியோரை பொருத்த வரை அபூ பஸீர், அபூ ஜந்தல் (ரலி) மற்றும் இந்த இருவரின் தோழர்கள் அபூல் ஆஸுடைய அந்தக் குழுவிடமிருந்து செல்வங்களை கைப்பற்றியும் அவர்களை சிறை பிடிக்கவும் செய்தார்கள். அவர்களின் தங்குமிடம் ஸீஃபுல் பஹ்ராக இருந்தது. ஸீஃபுல் பஹ்ரைக் குறித்து முன்னரும் கூறப்பட்டு விட்டது. இது ஈஸ் என்ற இடத்தின் சுற்றுவட்டாரத்தில் கடலின் கரையோரத்தில் இருந்தது. அன்னார் இருவரும் அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த எவரையும் கொலை செய்யவில்லை ; ஏனெனில், இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் அபூல் ஆஸிற்கு மாமனார் வீட்டு உறவு இருந்தது. இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகனாக இருந்தார். ஓர் அறிவிப்பில் வருகின்றது: அபூல் ஆஸ் ஸரிய்யா குழுவினருடன் அதாவது ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் படையினரிடமிருந்து தப்பி ஓடிவிட்டார். முஸ்லிம்கள் அந்தக் குழுவினரின் செல்வங்களை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தபோது அபூல் ஆஸ் இரவில் மதீனாவிற்கு வந்தார். எந்த அளவிற்கு என்றால், தமது துணைவியாரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புதல்வி ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களிடம் வந்தார். மேலும், அன்னாரிடம் அடைக்கலம் வேண்டினார். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் அபூல் ஆஸிற்கு அடைக்கலம் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுபுஹ் தொழுகையை தொழ வைத்தபோது அன்னார் (ஸல்) தக்பீர் கூறினார்கள். மேலும், மக்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தக்பீர் கூறினார்கள். அப்போது பெண்களுக்கான இடமாக இருந்த ஸுஃப்பதுன் நிஸாஃ என்ற திண்ணையிலிருந்து உரத்த குரலில் சப்தம் எழுப்பினார்கள்.

மேலும் ஓர் அறிவிப்பில் வருகின்றது: அன்னார் (ரலி) தமது வாசலில் நின்று கொண்டு உரத்த குரலில் இவ்வாறு கூறினார்கள்: மக்களே! நான் அபூல் ஆஸிற்கு அடைக்கலம் கொடுத்து இருக்கின்றேன். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தொழுகையை முடித்து விட்டு ஸலாம் கூறியபோது, அன்னார் (ஸல்) மக்களின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். மேலும் கூறினார்கள்: மக்களே! நான் செவியுற்றதை நீங்களும் செவியுற்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு, ஆம்! என்று அவர்கள் கூறினர். அன்னார் (ஸல்) கூறினார்கள்: எந்த இறைவனின் கையில் முஹம்மது (ஸல்) அவர்களின் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் இந்த விவகாரத்தில் எதனைக் குறித்தும் அறியேன். எனக்கு இதனை குறித்து முன்னரே தெரியாது. தற்போது நான் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களிடமிருந்தே செவியேற்கிறேன். எந்த அளவுக்கு என்றால் நீங்கள் எதனை செவியுற்றீர்களோ அதனையே நானும் செவிமடுத்து இருக்கின்றேன். முஸ்லிம்கள் தங்களது எதிரிகளுக்கு எதிராக ஒரு கரத்தில் ஒன்று கூடியிருக்கின்றனர். அன்னார் (ஸல்) கூறினார்கள்:

முஸ்லிம்கள் தமது எதிரிகளுக்கு எதிரில் ஒரு கரத்தில் ஒன்று கூடியிருக்கின்றனர். மேலும் அவர்களில் கீழ்மட்டத்தில் இருக்கும் நபரும் கூட அடைக்கலம் கொடுக்க முடியும்.

மேலும் ஓர் அறிவிப்பில் வருகின்றது: அன்னார் (ஸல்) கூறினார்கள்: எவருக்கு ஸைனப் (ரலி) அவர்கள் அடைக்கலம் கொடுத்து விட்டார்களோ அவருக்கு நாமும் அடைக்கலம் கொடுத்து விட்டோம்.

பின்னர் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் நுழைந்தபோது ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களும் இறைத் தூதர் (ஸல்) அவர்களுடன் நுழைந்தார்கள். மேலும், அபூல் ஆஸ் அவர்களிடமிருந்து என்னவெல்லாம் பறிக்கப்பட்டதோ அவற்றை திருப்பிக் கொடுக்கும்படி வேண்டினார்கள். அன்னார் (ஸல்) அதனை ஏற்றுக் கொண்டார்கள். மேலும், அன்னார் (ஸல்) கூறினார்கள்: மகளே! அவருக்கு நல்ல முறையில் விருந்து உபசரிப்பு செய்வீராக! ஆயினும் அவருடன் தனிமையில் சந்திக்க வேண்டாம். நிச்சயமாக நீ அவருக்கு ஆகுமானவர் கிடையாது. ஏனெனில், அவர் காஃபிர் ஆவார்; நீயோ முஸ்லிம் ஆவாய்!

அபூல் ஆஸிடமிருந்து செல்வத்தை எடுத்துக் கொண்ட அந்த ஸரிய்யா குழுவினருக்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தூதுச் செய்தி அனுப்பினார்கள். அன்னார் (ஸல்) அவர்களுக்கு கூறினார்கள்: நீங்கள் அறிந்தது போன்று இந்த நபர் நம்மைச் சேர்ந்தவர் ஆவார். அதாவது அவருக்கு என்னுடன் உறவு உள்ளது; நீங்களோ அவரிடமிருந்து செல்வத்தை பறித்துக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் கருணை காட்டி அவருக்கு அவரது செல்வத்தை திருப்பிக் கொடுத்து விடுங்கள். அன்னார் (ஸல்) அவ்வாறு செய்யும்படி கட்டளை வழங்கவில்லை. அன்னார் (ஸல்) கூறினார்கள்: கருணை காட்டுங்கள்; மேலும், அவரது செல்வத்தை அவருக்கு திருப்பிக் கொடுத்து விடுங்கள்.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

அவ்வாறு செய்தால் அது எமக்கு விருப்பத்திற்குரியதாகும். ஒருவேளை இதனை நீங்கள் மறுத்து விட்டால் பின்னர் இதுவோ அல்லாஹ்வின் அருட்கொடையாகும். அவன் உங்களுக்கு வழங்கியுள்ளான். எனக்கு அதன் மீது எந்த ஆட்சேபனையும் கிடையாது. மேலும் நீங்கள் அதற்கு அதிக தகுதி படைத்தவர்கள் ஆவீர்கள். அப்போது, அவர்கள் கூறினர்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் இந்த செல்வத்தை அவருக்கு திருப்பிக் கொடுத்து விடுகின்றோம்.

இப்னு உக்பா இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அபூ பஸீரும், அபூ ஜந்தல் (ரலி) அவர்களும் கைது செய்த தமது கூட்டாளிகளைப் பற்றியும், அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அவர்களது செல்வத்தை பற்றியும் அபூல் ஆஸ் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களிடம் பேசினார். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் இது குறித்து பேசினார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள்; மேலும் அந்த மக்களிடம் உரையாற்றினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: நாம் சில நபர்களை மருமகன்களாக ஆக்கிக் கொண்டோம். மேலும் நாம் அபூல் ஆஸையும் மருமகனாக ஆக்கிக் கொண்டோம். மேலும் அவரை நாம் நல்ல மருமகனாகக் கண்டுள்ளோம். அவர் சிரியாவில் இருந்து தமது சில குறைஷிய கூட்டாளிகளுடன் வந்து கொண்டிருந்தார். அபூ ஜந்தல் மற்றும் அபூ பஸீரும் அவர்களை பிடித்து விட்டனர். மேலும் அவர்களை சிறைபிடித்து விட்டனர். மேலும் அவர்களிடம் என்னவெல்லாம் இருந்தனவோ அவற்றை அபூ ஜந்தலும், அவரது தோழர்களும் பறித்துக் கொண்டனர். மேலும், அவர்களில் எவரையும் கொலை செய்யவில்லை. மேலும், நான் அவருக்கு அடைக்கலம் கொடுக்கட்டுமா? என்று ஸைனப் (ரலி) என்னிடம் கேட்டார். எனவே, நீங்கள் அபூல் ஆஸ் மற்றும் அவரது தோழர்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்றீர்களா? என்று அன்னார் (ஸல்) மக்களிடம் கேட்டார்கள். அதற்கு, ஆம்! என்று மக்கள் கூறினர். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்று அபூ ஜந்தல் மற்றும் அன்னாரின் தோழர்களுக்கு அபூல் ஆஸ் மற்றும் கைதிகளான அவரது கூட்டாளிகளைக் குறித்து சென்றடைந்தபோது, அவர்கள் அனைவரையும் விடுதலை செய்து விட்டார்கள். மேலும், எல்லாப் பொருட்களையும் அவர்களுக்கு திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். எந்த அளவுக்கென்றால் கயிறை கூட கொடுத்து விட்டார்கள். இப்னு இஸ்ஹாக் மற்றும் முஹம்மது பின் உமர் ஆகியோரை பொருத்த வரை ஸஹாபிகள் அவர்களுடைய எல்லாப் பொருட்களையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், ஒரு நபர் குவளையை எடுத்துக் கொண்டு வந்தார்; மற்றொருவர் தண்ணீர்ப் பையையும், வேறொருவர் குடத்தையும் எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார். சவாரிகளில் அமர்வதற்கான மரப்பலகையாக இருந்தாலும் அதனையும் திருப்பிக் கொடுத்து விட்டனர். அவர்கள் கைதிகள் உட்பட அனைத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டனர். மேலும் அவற்றில் எதனையும் குறைவு வைக்கவில்லை.

பின்னர் அபூல் ஆஸ் செல்வங்களை எடுத்துக் கொண்டு மக்காவை நோக்கி சென்று விட்டார். மேலும், உரிமை படைத்த

ஒவ்வொருவருக்கும் அவரது உரிமை வழங்கப்பட்டது. பின்னர் எழுந்து நின்று விட்டார். மேலும், மக்காவாசிகளுக்கு முன்னர் அபூல் ஆஸ் இவ்வாறு கூறினார்: மக்காவாசிகளே! உங்களில் எவர் ஒருவருடைய செல்வமாவது என்னிடம் எஞ்சியிருக்கின்றதா? என்னிடம் இருந்து (தமது செல்வத்தை)பெற வேண்டிய எவராவது இருக்கின்றாரா? மக்காவாசிகளே! நான் எனது பொறுப்பை முழுமையாக செலுத்தி விட்டேனா? அப்போது அனைவரும் ஆம்! என்று கூறினர். மேலும், அல்லாஹ் உமக்கு சிறந்த பிரதிபலனை வழங்கட்டும்; நாங்கள் உம்மை மிகச் சிறந்த விசுவாச மிக்கவராகக் கண்டோம் என்று கூறினர். அப்போது அபூல் ஆஸ் அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டதாக அறிவித்தவாறு கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவரும் இல்லை ; மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத் தூதரும், அடியாரும் ஆவார்கள் என்று நான் சாட்சி கூறுகின்றேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! இறைத் தூதர் (ஸல்) அவர்களிடத்தில் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்து எந்தவொரு விஷயமும் என்னைத் தடுத்திருக்க முடியாது. அதாவது நான் மதீனாவில் இருந்தபோது, அங்கும் என்னால் இஸ்லாத்தை தழுவியிருக்க முடியும்; ஆனால், நான் உங்களது செல்வத்தை விழுங்குவதற்கு எண்ணம் கொண்டுள்ளேன் என்று நீங்கள் கருதிவிடுவீர்களோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டது. அல்லாஹ் இந்த செல்வங்களை உங்களிடம் வந்தடைய செய்து விட்டான். அதாவது அமானிதங்களை நான் உங்களிடம் திருப்பிக் கொடுத்து விட்டேன். மேலும், நான் அதிலிருந்து விலகிக் கொண்டபோது நான் இஸ்லாத்தை தழுவி விட்டேன். பின்னர் அங்கிருந்து வந்து விட்டார்கள். மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் மதீனாவிற்கு வந்து விட்டார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 6, பக்கம் 83 - 84, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஈஸ் பக்கம் நிகழ்ந்த அந்த ஸரிய்யாவில் பிடிக்கப்பட்ட அந்தக் கைதிகளில் அபூல் ஆஸ் பின் அர்ரபீஃ அவர்களும் இருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகனாகவும் இருந்தார்கள். மேலும் மர்ஹூமா ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் நெருங்கிய உறவினர்களில் ஒருவராகவும் இருந்தார்கள். இதற்கு முன்னர் அன்னார் பத்ர் போரிலும் கைது செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டார்கள். ஆனால், அந்நேரத்தில், அவர் மக்கா சென்றடைந்து தமது புதல்வி ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களை அனுப்பி வைத்து விட வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் அவரை விட்டு விட்டார்கள். அபூல் ஆஸ் அந்த வாக்குறுதியையோ முழுமை செய்து விட்டார். ஆனால், சுயமே அதுவரை இணை வைத்தலில் நிலைபெற்றிருந்தார்கள். ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் அன்னாரை கைது செய்து மதீனாவிற்கு கொண்டு வந்தபோது இரவு நேரமாக இருந்தது. ஆயினும் எப்படியோ அபூல் ஆஸ் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுக்கு, தான் இவ்வாறு கைது செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டுள்ளேன்; நீங்கள் எனக்காக ஏதாவது செய்ய முடிந்தால் செய்யுங்கள் என்று தகவல் அனுப்பி விட்டார். ஆக, அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய ஸஹாபிகள் ஸுபுஹ் தொழுகையில் மும்முரமாக இருந்தார்கள். ஸைனப் (ரலி) அவர்கள் வீட்டின் உள்ளே இருந்து உரத்தக் குரலில் விளித்து கூறினார்கள்; முஸ்லிம்களே! நான் அபூல் ஆஸிற்கு அடைக்கலம் கொடுத்துள்ளேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையை முடித்து விட்டபோது, ஸஹாபிகளின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். மேலும் கூறினார்கள்: ஸைனப் என்ன கூறினாரோ அதனை நீங்கள் செவிமடுத்து இருப்பீர்கள்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு இது குறித்து தெரியாது; ஆனால், நம்பிக்கையாளர்களின் கூட்டத்தினர் ஓர் உயிரைப் போன்றவர்கள் ஆவர்; அவர்களில் ஒருவர் ஒரு நிராகரிப்பாளருக்கு அடைக்கலம் கொடுத்து விட்டால் பின்னர் அதற்கு கண்ணியமளிப்பது கடமையாகும்.

பின்னர் அன்னார் (ஸல்) ஸைனப் (ரலி) அவர்களின் பக்கம் கவனம் செலுத்தியவாறு கூறினார்கள்:

நீர் எவருக்கு அடைக்கலம் கொடுத்தீரோ அவருக்கு நாமும் அடைக்கலம் கொடுக்கின்றோம். மேலும் இந்தப் போரில் அபூல் ஆஸிடமிருந்து என்ன செல்வம் கிடைத்ததோ அதனை அவருக்கு திருப்பிக் கொடுத்து விட்டோம்.

பின்னர் அன்னார் (ஸல்) வீட்டிற்கு வருகை தந்து விட்டார்கள். மேலும்,தமது புதல்வி ஸைனப் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: அபூல் ஆஸிற்கு நன்றாக விருந்து உபசரிப்பு செய்யுங்கள்; ஆயினும் அவரை தனிமையில் சந்திக்க வேண்டாம். ஏனெனில், தற்போதைய நிலையில் நீங்கள் அவருடன் கூடுவது ஆகுமற்றதாகும். சில நாட்கள் மதீனாவில் தங்கிவிட்டு அபூல் ஆஸ் மக்காவை நோக்கி திரும்பி சென்று விட்டார். ஆயினும் தற்போது அவர் மக்காவிற்கு சென்றது அங்கு தங்க வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டதாக இருக்கவில்லை. ஏனெனில், அன்னார் மிக விரைவாக தமது கொடுக்கல் வாங்கலை முழுமை செய்து விட்டார்கள். மேலும், ஷஹாதத் கலிமாவை படித்தவாறு மதீனாவை நோக்கி புறப்பட்டு விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி முஸ்லிமாகி விட்டார்கள். மேலும், அன்னார் (ஸல்) ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுக்கு அன்னாருடன் எந்தவொரு புதிய நிக்காஹ்வையும் நடத்தாமல் அன்னாருடன் திருப்பி அனுப்பி விட்டார்கள். அதாவது தற்போது அன்னார் மனைவியாக அவருடன் இருப்பதற்கு அன்னாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி நல்கி விட்டார்கள். ..........சில அறிவிப்புகளில் இந்த விஷயமும் வருகின்றது. அதாவது அந்நேரத்தில் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுக்கும், அபூல் ஆஸ் அவர்களுக்கும் மீண்டும் நிக்காஹ் நடத்தப்பட்டது. ஆனால் முதல் அறிவிப்பு மிகவும் உறுதியானதும், சரியானதும் ஆகும். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 674 - 676)

ஹஸ்ரத் அபூல் ஆஸ் (ரலி) அவர்களின் வணிகத் தொடர்புகள் மக்காவில் இருந்தன. எனவே அன்னாரால் மதீனாவில் தங்க முடியாமல் போனது. ஆக, இஸ்லாத்தை ஒப்புக் கொண்டதற்கு பிறகு அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அனுமதி பெற்று பின்னர் மீண்டும் மக்காவிற்கு திரும்பி சென்றார்கள். மக்காவில் தங்கியிருந்ததன் காரணமாக அன்னாரால் போர்களில் பங்கு பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஹிஜ்ரீ பத்தாம் ஆண்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் தலைமையில் அனுப்பப்பட்ட ஒரு ஸரிய்யாவில் மட்டும் அன்னார் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஏமனிலிருந்து திரும்பி வந்தபோது அன்னாரை ஏமனுடைய அதிகாரியாக ஆக்கினார்கள். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு மரணமடைந்த பிறகு அபூல் ஆஸ் அவர்களும் அதிக காலம் உயிருடன் இருக்கவில்லை. மேலும் ஹிஜ்ரீ 12-ம் ஆண்டு அன்னார் (ரலி) மரணமடைந்து விட்டார்கள். ( ஸீரத்துஸ் ஸஹாபா தொகுதி 4, பக்கம் 491, தாருல் இஷாஅத் கராச்சி)

அடுத்து ஒரு போரைக் குறித்த குறிப்பு கிடைக்கின்றது. அது பனூ லஹ்யான் போர் என்றழைக்கப்படுகின்றது. இந்தப் பெயர் லிஹ்யான் என்றும் லஹ்யான் என்றும் வருகின்றது. (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 674 - 676)

பனூ லஹ்யான் பனூ ஹுஸைல் கோத்திரத்தின் ஒரு கிளையாகும். மக்காவிலிருந்து மூன்று கட்டங்களில் உஸ்ஃபான் பள்ளத்தாக்கு இருந்தது. அதன் வடகிழக்கில் ஐந்து மைல் தொலைவில் குரான் பள்ளத்தாக்கில் பனூ லஹ்யான் கோத்திரத்தினர் வசித்து வந்தனர். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத் தொகுதி 6, பக்கம் 30, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஸரிய்யா பனூ லஹ்யானைக் குறித்து அது எந்த மாதம் மற்றும் ஆண்டு நிகழ்ந்தது? என்பதில் கருத்து வேறுபாடு இருக்கின்றது.

அல்லாமா இப்னு ஸஅது அவர்களை பொருத்த வரை இந்த போர் ரபீயுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் நிகழ்ந்தது. முஹம்மது பின் உமரைப் பொருத்த வரை ரஜப் மாதம், ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டும், அல்லாமா இப்னு இஸ்ஹாகைப் பொருத்த வரை இந்தப் போர் பனூ குறைழா போர் நிகழ்ந்து ஆறு மாதம் கழிந்த பிறகு ஜுமாதல் ஊவ்லா மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு நிகழ்ந்தது. அல்லாமா ஹாகிம் அதனை ஷஃபான் மாத போர் என்றும் எழுதியுள்ளார்கள். அல்லாமா இப்னு ஹஸ்ம் ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு என்றும், அல்லாமா ஸஹபீ அவர்கள் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு என்றும் வேறு சில வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் அதனை ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு நிகழ்ந்த போர் என்றும் எழுதியுள்ளார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத் தொகுதி 6, பக்கம் 30- 31, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் வந்த முடிவின்படி அதில் அதனை ஜுமாதல் ஊவ்லா மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டிற்கேற்ப கி.பி 627, செப்டம்பர் மாதம் நிகழ்ந்த போர் என்று எழுதியுள்ளார்கள்.

அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: பனூ லஹ்யான் போர் நிகழ்ந்த தேதிகள் தொடர்பாக வரலாற்றாசிரியர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு இருக்கின்றது. இப்னு ஸஅத் அவர்கள் அதனை ரபீயுல் அவ்வல் மாதம், ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு என்று எடுத்துரைத்துள்ளார்கள். ஆனால், இப்னு இஸ்ஹாக் அவர்களும், திப்ரீயும்

விளக்கியுள்ளார்கள். அதாவது அது ஜுமாதல் ஊவ்லா மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில் நிகழ்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் இந்த இடத்தில் இப்னு இஸ்ஹாக் அவர்களை பின்பற்றியுள்ளேன். அதாவது அன்னாரின் பார்வையில் அது சரியானதாகும். அல்லாஹ்வே நன்கறிவான்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 674 - 676)

பனூ லஹ்யான் போருடைய பின்னணியைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் அஸ்ஹாபே ரஜீஃ உடைய வேதனை மிகுந்த சம்பவத்தின் அடிப்படையில் குறிப்பிடுகின்றார்கள்:

அந்த சந்தர்ப்பத்தில் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த பிரச்சாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள் மிகவும் இரக்கமின்றியும், ஏமாற்றப்பட்டும் கொலை செய்யப்பட்டார்கள். மேலும், இந்த அனைத்து குழப்பங்களில் பின்னணியில் பனூ லஹ்யான் கோத்திரத்தின் கை இருந்தது. அந்தக் கோத்திரம் அக்காலத்தில் மக்கா மற்றும் மதீனாவிற்கு இடையில் குரான் என்ற பள்ளத்தாக்கில் வசித்து வந்தது. இயல்பாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம்; (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தால் கடும் துன்பம் ஏற்பட்டது. மேலும் அப்போது வரை பனூ லஹ்யானுடைய நடவடிக்கை பகைமையுணர்வு கொண்டதாகவும், குழப்பத்திற்குரியதாகவும் இருந்து வந்தது. மேலும் அவர்கள் தரப்பில் இருந்து எதிர்காலத்தில் இந்த அச்சமும் இருந்தது. அதாவது அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இன்னும் கூடுதலாக ஏதாவது குழப்பத்திற்கு காரணமாக ஆகிவிடக் கூடும் என்ற அச்சம் இருந்தது. எனவே அன்னார் (ஸல்) நிர்வாக ரீதியில் இதனை உகந்ததாகக் கருதினார்கள்: அதாவது அவர்களுக்கு ஏதாவது தண்டனை வழங்க வேண்டும்; அப்போதுதான் குறைந்தபட்சம் எதிர்காலத்தில் அவர்களின் குழப்பங்களிலிருந்து முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று அன்னார் (ஸல்) கருதினார்கள்.(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 674 - 675)

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் இப்னு உம்மே மக்தூம் அவர்களை மதீனாவின் பிரதிநிதியாக நியமித்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) இந்த தண்டனை வழங்கும் திட்டத்தில் அந்த போருக்காக புறப்பட்டார்கள். மேலும், இப்னு உம்மே மக்தூம் அவர்களை பிரதிநிதியாக நியமித்தார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தம்முடன் இரு நூறு ஸஹாபிகளையும் 20 குதிரைகளையும் அழைத்துக் கொண்டு மதீனாவின் வடக்குப் பக்கம் சிரியாவின் வழியாக புறப்பட்டார்கள். அப்போது பனூ லஹ்யான் தெற்கில் ஹிஜாஸில் மக்காவின் வழிப் பாதைக்கு அருகில் வசித்து வந்தனர். வடக்குப் பக்கம் சென்றதற்கான காரணம் என்னவாக இருந்தது என்றால், பனூ லஹ்யான் மீது அவர்கள் அறியாத வண்ணம் திடீரென அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு அன்னார் விரும்பியிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் தாக்குதலுக்கு தகவல் கிடைத்து அவர்கள் வேறெங்கும் தப்பியோடி விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். இதே நோக்கத்திற்காக அன்னார் (ஸல்) பொதுவாக பயன்படுத்தப்படும் வழிப்பாதையை பயன்படுத்தவில்லை. மேலும், வேகமாக பயணம் செய்தவாறு பனூ லஹ்யானுடைய ஊரான கரானில் சென்றடைந்தார்கள். அங்குதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் ஷஹீதாகி இருந்தார்கள். அன்னார் (ஸல்) தமது ஷஹீதான ஸஹாபிகளுக்காக கருணைக்கான துஆ செய்தார்கள். பனூ லஹ்யான் கோத்திரத்தாருக்கு அன்னாரின் வருகை குறித்து தெரிய வந்தது. எனவே அவர்கள் மலைகளின் உச்சிகளின் பக்கம் தப்பியோடி விட்டனர். எனவே அவர்களில் எவரும் பிடிக்கப்படவில்லை. (ஸுபுலுல் ஹுதா வர்ரஷ்ஷாத் தொகுதி 6, பக்கம் 30, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் அங்கு தங்கினார்கள். மேலும் எல்லா பக்கமும் குழுவினரை அனுப்பி வைத்தார்கள். ஆனால், எவருமே பிடிபடவில்லை. அன்னார் (ஸல்) குறிப்பிட்ட இலக்கை சென்றடைந்து அங்கு சிறிது நேரம் தங்கினார்கள். மேலும் அறிவிப்பில் வருகின்றது:

எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் ஷஹீதாக்கப்பட்டார்களோ அந்த இடத்தை அன்னார் (ஸல்) இந்த பயணத்தில் சென்றடைந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) மிகவும் உணர்ச்சிவயப்பட்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) மிகவும் உருக்கத்துடன் அந்த ஷஹீதுகளுக்காக துஆ வேண்டினார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 675)

பின்னர் எழுதுகின்றார்கள்: பனூ லஹ்யான் மீது திடீர் தாக்குதல் தொடுப்பதற்கான எண்ணம் அவர்கள் மலைகளில் ஓடி ஒளிந்து கொண்டதன் காரணமாக முழுமையடையவில்லை. எனவே மக்காவாசிகள் அன்னார் (ஸல்) மக்காவிற்கு வர இருக்கின்றார்கள் என்று புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அன்னார் (ஸல்) உஸ்ஃபான் என்ற இடம் வரை சென்றார்கள். எனவே அன்னார் தமது ஸஹாபிகளுடன் உஸ்ஃபான் சென்றடைந்தார்கள். இப்னு இஸ்ஹாக் அவர்களை பொருத்தவரை அன்னார் (ஸல்) இரண்டு குதிரை சவாரிகளை அனுப்பி வைத்தார்கள். மேலும் இப்னு ஸஅது அவர்களை பொருத்த வரை அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை பத்து குதிரை சவாரிகளுடன் அனுப்பி வைத்தார்கள். குறைஷியர்கள் அன்னாரை குறித்து செவியேற்க வேண்டும்; மேலும் அவர்கள் மீது அச்சம் கொள்ள வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் குராஉல் கமீம் என்ற இடம் வரை சென்றார்கள். அந்த இடம் உஸ்ஃபானிலிருந்து 8 மைல் தொலைவில் அமைந்திருந்த ஒரு பள்ளத்தாக்கு ஆகும். பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஸ்ஃபானின் பக்கம் திரும்பிச் சென்றார்கள். மேலும் எவரையும் அன்னார் எதிர்கொள்ளவில்லை. அதன் பிறகு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு திரும்பும் பயணத்தை துவங்கினார்கள். மேலும், 14 நாட்கள் வெளியில் தங்கியிருந்த பிறகு அன்னார் திரும்பி வந்து விட்டார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத் தொகுதி 6, பக்கம் 30, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: (மதீனாவிற்கு) திரும்பி வருகின்ற பயணத்தில் அன்னார் (ஸல்) ஒரு துஆ செய்தார்கள். அதனை பிற்காலத்தில் முஸ்லிம்கள் தங்களது முக்கியமான பயணங்களில் இருந்து திரும்பி வருகின்ற சந்தர்ப்பங்களில் பொதுவாக செய்து வந்தார்கள். அந்த துஆ இதுவாகும்:

آيِبُونَ تَائِبُونَ عَابِدُونَ
سَاجِدُونَ لِرَبِّنَا حَامِدُونَ

பொருள்: நாம் நமது இறைவனின் பக்கம் திரும்பக் கூடியவர்கள் ஆவோம்; அவன் பக்கமே குனிபவர்கள் ஆவோம்; மேலும் அவனை வணங்குகின்றவர்கள் ஆவோம்; மேலும் அவனுக்கு முன்பே குனிகின்றவர்கள் ஆவோம். மேலும் நமது இறைவனின் புகழை எடுத்துரைக்கக் கூடியவர்கள் ஆவோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே தமது பிற்காலத்து பயணங்களில் பொதுவாக இந்த துஆவை செய்து வந்தார்கள். மேலும் சிலவேளைகளில் அத்துடன் இந்த சொற்களையும் கூடுதலாக அன்னார் (ஸல்) குறிப்பிட்டு வந்தார்கள்:

صَدَقَ اللّٰهُ وَعْدَهٗ وَنَصَرَ عَبْدَهٗ
وَحَزَمَ الْاَحْزَابَ وَحْدَهٗ

பொருள்: நமது இறைவன் தனது வாக்குறுதியை முழுமை செய்து விட்டான். மேலும் தனது அடியாருக்கு உதவி செய்துள்ளான். மேலும், எதிரியின் படைகளை சுயமே தனது ஆற்றலால் அழித்து விட்டான்.

இந்த துஆவை பனூ லஹ்யான் போர் தொடர்பாக வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் எடுத்துரைத்துள்ளனர். மேலும் முஹத்திஸ்மார்களும் அதனை உண்மைப்படுத்தியுள்ளனர். அந்த துஆ தன்னுள் ஒரு சிறப்புத் தன்மையை கொண்டிருக்கின்றது. மேலும் அதனை படிப்பதால் அந்த உணர்வுகளை அனுமானித்துப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மேலும் அந்த குழப்பம் நிறைந்த காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய உள்ளம் எவ்வாறு தன்னை (இறைவனிடம்) மாய்த்துக் கொள்ள அலை மோதிக் கொண்டிருந்தது? என்று அந்த உணர்வுகளை அனுமானிக்க முடிகின்றது. அதனையே அன்னார் (ஸல்) தமது ஸஹாபிகளிடம் உருவாக்க விரும்பியிருந்தார்கள்.

இந்த துஆவில் இந்த துடிப்பு மறைந்திருக்கின்றது. அதாவது முஸ்லிம்கள் இறைவனை வணங்குவதிலும் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த பிரச்சாரத்தின் வழியிலும் எதிரிகள் புறமிருந்து ஏற்படுத்தப்பட்ட தடைகளை அல்லாஹ் அகற்ற வேண்டும் என்ற துஆவும், எந்த அளவிற்கு அல்லாஹ் அந்த தடையை நீக்கியிருந்தானோ அதற்காக நன்றிகளை எடுத்துரைப்பதும் அதில் அடங்கியிருந்தது.

இதற்கான உதாரணம் இதுவாகும். அதாவது ஒரு நபர் தனக்கு மிகவும்

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பிடித்தமான ஒரு பணியில் மூழ்கி இருக்கும்போது, பின்னர் திடீரென மற்றொரு நபர் அவரது பணியில் இடைமறித்து அவரது கவனத்தை சிதறடிக்கின்றார். ஆனால், சிறிது நேரத்திற்கு பிறகு இறை அருளின் கீழ் இந்த தடை நீங்கி விடுகின்றது. மேலும், அந்த நபர் தமது விருப்பத்திற்குரிய பணியில் மும்முரமாக ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்கின்றார். அதுபோன்ற சந்தர்ப்பத்தில் அந்த நபரின் உள்ளத்தில் என்ன உணர்வுகள் எழுமோ அதுவே இந்த துஆவில் மறைந்திருக்கின்றது. ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாம் இந்த பயணத்தில் தற்காலிக தடைகளிலிருந்து விடுபட்டு பின்னர் நமது இறைவனின் நினைவில் நேரத்தை கழிக்கக் கூடிய அந்த நிலைமையின் பக்கம் நாம் திரும்பி சென்று கொண்டிருக்கின்றோம். மேலும், நாம் அதில் அந்த இறைவனின் புகழைப் பாடுவதற்கான சந்தர்ப்பத்தை நாம் பெறுவோம். ஆம், எந்த இறைவன் இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிரியின் குழப்பங்களிலிருந்து நம்மை பாதுகாத்து அமைதியை வழங்கிக் கொண்டிருந்தானோ அதே இறைவனின் புகழை நாம் பாடுவோம். இது எப்படிப்பட்ட அருளுக்குரிய, உள்ளத்தை கவரக் கூடிய, மற்றும் அமைதி நிறைந்த உணர்வு ஆகும்.

ஆனால், வேதனை என்னவென்றால், இதன் பின்னரும் இஸ்லாத்தின் சில எதிரிகள் ஆட்சேபனைகள் செய்வதிலிருந்து விலகுவதில்லை. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், அன்னாரின் ஸஹாபிகளுக்கும் ஆக்ரோஷமான இராணுவத்தை கட்டமைப்பதும், உலகியல் தேடலும் அசல் நோக்கமாக இருந்தது என்று கூறுகின்றனர். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 675)

அடுத்த ஒரு ஸரிய்யா என்பது ஸரிய்யா ஸைது பின் ஹாரிஸா ஆகும். இது ஜுமாதல் ஆகிர் மாதம், ஹிஜ்ரீ ஆறாம் வருடம் நிகழ்ந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை பனூ ஸஃலபா பின் ஸஅது எனும் கோத்திரத்தை நோக்கி தரிஃப் என்ற இடத்தின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். தரிஃப் என்பது பனூ ஸஃலபா கோத்திரத்தின் ஒரு கிணற்றின் பெயராகும். அது ஈராக்கின் வழியில் மதீனாவில் இருந்து 36 மைல் தொலைவில் இருக்கின்றது. ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் 15 நபர்களுடன் புறப்பட்டார்கள். எந்த அளவிற்கு என்றால் அன்னார் தரிஃபை சென்றடைந்தார்கள். அப்போது அங்கு ஒட்டகங்களையும், ஆடுகளையும் கைப்பற்றினார்கள். மேலும், அங்கு இருந்த குடிமக்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தங்களை நோக்கி புறப்பட்டு இருக்கின்றார்கள் என்று அச்சமடைந்தனர். மேலும் அவர்கள் அங்கிருந்து தப்பியோடி விட்டனர். ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் கால்நடைகளை ஓட்டிக் கொண்டு மதீனாவிற்கு கொண்டு வந்தார்கள். பனூ ஸஃலபாவின் மக்கள் அந்த ஸஹாபிகளை தேடி புறப்பட்டார்கள். ஆனால், அவர்களால் ஸஹாபிகளை பிடிக்க முடியவில்லை. ஸஹாபிகள் மொத்தம் 20 ஒட்டகங்களை கொண்டு வந்தார்கள். நான்கு இரவுகள் இந்த போருக்காக (மதீனாவில் இருந்து) வெளியில் தங்கியிருந்தார்கள். மேலும் போர் புரிவதற்கான சூழல் உருவாகவில்லை. இந்த ஸரிய்யாவில் முஸ்லிம்களின் முழக்கம் உம்மத், உம்மத் என்பதாக இருந்தது. (ஸுபுலுல் ஹுதா வர்ரஷ்ஷாத், தொகுதி 6, பக்கம் 87, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

மற்றவை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில்…

இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகளை அனைவரும் அறிவர். சிரியாவில் உருவாகி வரும் நிலைமைகள் இன்னும் தெளிவாகவில்லை. அநீதியான அரசாங்கம் ஒழிந்து விட்டது என்று கூறுகின்றனர். ஆனால், வரக் கூடிய (புதிய) அரசாங்கமும் நீதியுடன் செயல்படக் கூடியதாக இருக்க வேண்டும் என்று துஆ செய்யுங்கள். நாங்கள் நீதம் செய்வோம் என்று வரக் கூடிய (புதிய) ஆட்சியாளர்கள் ஏராளமான விஷயத்தை கூறுகின்றனர். ஆனால், பொதுவாக அதிகாரம் கிடைத்து விடும்போது பின்னர் அவர்கள் கூறுகின்ற விஷயம் வேறொன்றாக இருப்பதாகவே பார்க்கப்பட்டுள்ளது. செய்வது ஒன்று ; கூறுவது ஒன்று. அல்லாஹ் இந்தப் பகுதிகளில் அஹ்மதிகளை தனது பாதுகாப்பில் வைப்பானாக!

ஆய்வாளர்கள் எழுதுகின்றார்கள்: பொதுமக்கள் வெளிப்படையில் அநீதி ஒழிந்து விட்டது என்று மகிழ்ச்சியை கொண்டாடுகின்றனர். ஆனால், இனி என்ன நடக்கும்? என்று எதுவும் தெரியாது. இதே போன்று இஸ்ரேலும் இந்தப் பகுதிகளில் தேவையின்றி தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றது.

வெளிப்படையில் இஸ்லாமிய உலகிற்கு எதிராக அவர்களின் எண்ணங்கள் அபாயகரமானவையாகும். மேலும், இந்த அடிப்படையில் எந்தவொரு ஒரு நாடும் பாதுகாப்பானதாக இல்லை. பாகிஸ்தானிற்காகவும் இந்த அடிப்படையில் துஆ செய்யுங்கள்; ஈரானிற்காகவும், ஏனைய நாடுகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவையும், புரிதலையும் வழங்குவானாக. மேலும் பிரிவினைவாதமும், அதிகார வேட்கையும் அவர்களிடமிருந்து ஒழியட்டுமாக ; மேலும் இவர்கள் ஒன்றுபடட்டுமாக!

அல்லாஹ் எல்லா அஹ்மதியையும் அவர்களின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக. அஹ்மதிகளோ இந்த பெயர் தாங்கி முஸ்லிம்களிடமிருந்தும் பாதுகாப்பாக இல்லை ; முஸ்லிம்களுக்கு எதிராக இருக்கின்ற அந்நியர்களின் கைகளிலும் அஹ்மதிகள் பாதுகாப்பாக இல்லை. அல்லாஹ் கருணை புரிவானாக! மேலும் நம்மை எல்லா ரீதியிலும் தனது பாதுகாப்பில் வைப்பானாக!

இதே போன்று உலகில் இன்றைய நாட்களில் புயல்களும் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. கடந்த நாட்களில் மாயூட்டில் புயல் வந்தது. அங்கும் அஹ்மதிகள் இருக்கின்றனர். மேலும் அல்லாஹ்வின் அருளால் அவர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர். மேலும், ஜமாஅத்தும் அங்கு சேவையாற்றி வருகின்றது. மேலும் அதனை அரசாங்கமும் அங்கு பாராட்டியுள்ளது. மேலும்,

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

எங்கு மக்கள் தாங்கள் விரும்பிய விலைக்கு உணவை விற்பனை செய்து கொண்டிருக்கின்றார்களோ மேலும் பசித்தவர்களுக்கு உணவளிப்பதில்லையோ அங்கு ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் தொண்டாற்றி வருகின்றது. மேலும் உணவளித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், எவ்வாறு இருப்பினும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த தீவுகளை விண்ணின் ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பானாக!

இதன் பிறகு, தொழுகைக்குப் பிறகு நான் ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா அமீர் ஹஸன் முர்டானீ ஸாஹிப் ஷஹீது அவர்களுடையதாகும். இவர்கள்( மீர்பூர் காஸ் மாவட்டம்) நுஸ்ரத் ஆபாதைச் சேர்ந்த துர் முஹம்மது ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். கடந்த நாட்களில் இவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மஸ்ஜிதிலிருந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார்கள். துப்பாக்கியால் சுட்டு அவரை ஷஹீதாக்கிவிட்டனர். மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னார் விட்டுச் சென்றவர்களில் தாயாரும், மனைவியும், இரண்டு மகன்களும், மூன்று மகள்களும் உள்ளனர். சகோதர, சகோதரிகளும் உள்ளனர்.

கிடைத்த விவரங்களின்படி அமீர் ஹஸன் ஸாஹிப் அவர்கள் டிசம்பர் 13 அன்று காலையில் தஹஜ்ஜுத் தொழுகை மற்றும் ஸுபுஹ் தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றிய பிறகு தமது வீட்டிற்கு திரும்பி சென்று கொண்டிருந்தார்கள். அன்னாரின் மகன் 12 வயது மகன் தீமோர் உமரும் அன்னாருடன் இருந்தார். அன்னாருடைய வீட்டிற்கும், மஸ்ஜிதிற்கும் இடையில் ஒரு சாலை உள்ளது. அன்னார் சாலையை கடந்து கொண்டுதான் இருந்தார்கள்; அப்போது முன்னரே அங்கு மோட்டார் சைக்கிளில் இருந்த அடையாளம் தெரியாத இரு நபர்கள் ; அவர்கள் தமது முகங்களை மூடியிருந்தனர். அந்த இரு நபர்களும் அருகில் வந்து பெயரைக் கேட்டனர். அடையாளம் கண்டு கொண்ட பிறகு சுட்டு விட்டனர். ஷஹீது மர்ஹூம் மீது ஐந்து குண்டுகள் பாய்ந்துள்ளன. அதன் விளைவாக நிகழ்விடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இதன் பிறகு தாக்குதல் நடத்தியவர்கள் நிகழ்விடத்திலிருந்து தப்பியோடி விட்டனர். அன்னாரின் மகன் அன்பிற்குரிய தீமோரை அல்லாஹ் அற்புதமான முறையில் பாதுகாத்து விட்டான். மகனானவர் மிகவும் தைரியத்தையும், துணிவையும் வெளிப்படுத்தியவாறு ஜமாஅத் உறுப்பினர்களுக்கு சம்பவத்தை குறித்து தகவல் கொடுத்தார்.

மர்ஹூமுடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் அன்னாரின் கொள்ளுப் பாட்டனார் மதிப்பிறகுரிய தஹ்னீ பக்ஷ் ஸாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அன்னார் 1937-ம் ஆண்டு இரண்டாவது கிலாஃபத் காலத்தில் பைஅத் செய்திருந்தார்கள். ஷஹீது மர்ஹூம் அவர்களின் பாட்டனார் அஹ்மதியாக இருக்கவில்லை. ஆனால், குடும்பத்தின் ஏனைய நபர்கள், சிறிய தந்தைமார்கள் போன்றோர் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டனர். ஷஹீது மர்ஹூம்

அவர்களுடைய தந்தை துர் முஹம்மது அவர்கள் இரண்டாம் கிலாஃபத்தின் காலத்தில் 1964-ம் ஆண்டு மதிப்பிற்குரிய தாவூத் முஸஃபர் ஷாஃ ஸாஹிப் அவர்கள் மூலமாக பைஅத் செய்திருந்தார்கள். அந்த நாட்களில் அன்னார் அங்கு இருந்தார்கள். மேலும் விவசாயம் செய்து வந்தார்கள். ஷஹீது விவசாயப் பணிகளை செய்து வந்தார்கள். மேலும், சில காலமாக நுஸ்ரத் ஆபாத் பகுதியில் பாதுகாப்பு ஊழியராகவும் டியூட்டி கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.மர்ஹூமிற்கு காயித் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆகவும் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்துள்ளது. மேலும் ஷஹாதத் நேரத்தில் வக்ஃபே நவ் செகரட்டரி ஆக தொண்டாற்றும் நற்பேறை பெற்றுக் கொண்டிருந்தார்கள். கிலாஃபத்துடன் தூய்மையும், விசுவாசமும் மிக்க பெரும் தொடர்பு இருந்தது. விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவராக இருந்தார்கள்.மென்மையான இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள்.

அன்னாரின் தாயார் கூறுகின்றார்கள்: எனது மகனுக்கு ஷஹாதத் அந்தஸ்து கிடைத்திருப்பது எங்களுக்கு பெரும் கௌரவம் ஆகும். ஒருவேளை எனது இரண்டாவது மகனையும் எனக்கு குர்பான் கொடுக்க நேரிட்டால் நான் ஜமாஅத்திற்காக குர்பான் செய்து விடுவேன். மிகவும் தைரியமிக்க தாய் ஆவார்கள்.

அன்னாரின் தந்தையார் மரணமடைந்து விட்டார்கள். அதன் பிறகு எப்போதும் சகோதர, சகோதரிகளை கருத்தில் கொண்டு வந்தார்கள். யாசிக்கும் எவரையும் வெறும் கையுடன் அனுப்ப மாட்டார்கள். அவரது வீட்டிற்கு அருகில் அஹ்மதி அல்லாத கண் பார்வையற்ற ஒரு பெண்மணியும் இருந்தார். அவரது ஆடுகளையும், அவரது பிள்ளைகளையும் கருத்தில் கொண்டிருந்தார்கள். அவரது பிள்ளைகளை பள்ளிக் கூடத்திற்கு அழைத்து செல்வார்கள். மேலும் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதை மிகவும் பேணி வந்தார்கள்.

மீர்பூர் மாவட்ட அமீர் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஒவ்வொரு ஜமாஅத் நிகழ்ச்சிக்காவும் அனைத்து பணிகளையும் விட்டு விட்டு டியூட்டியில் ஆஜராகி விடுவார்கள். கூறுகின்றார்கள்: கடந்த ஒரு மாதமாக மர்ஹூமிடத்தில் ஏராளமான மாற்றங்களை கண்டோம். ஃபஜ்ருக்கு முன்னதாகவே வந்து மஸ்ஜிதை திறப்பது, நவாஃபில் இறை வணக்கங்களை நிறைவேற்றுவது போன்ற விஷயங்கள் அன்றாட நடைமுறையாக இருந்தது. ஒரு புதிய அமீர் ஹஸன் பிறந்து இருக்கின்றார் என்பது போன்று தோன்றியது.

ஜாமிஆவின் ஆசிரியரான காலித் பலூச் அன்னாருடைய உறவினர் ஆவார்கள்: கூறுகின்றார்கள்: அன்னாரின் சிறப்புகளில் துணிச்சல் மற்றும் பிறருக்கு உதவி செய்தல் போன்ற விஷயங்கள் மிகவும் அதிகமாக காணப்பட்டது. எப்போது அவரை சந்தித்தாலும் ஆன்மிக விஷயங்களை குறித்து எப்போதும் உரையாடுவார்கள். எப்போதும் இறைவன் மற்றும் அடியார்களுடனான தொடர்பை எப்படி சிறந்ததாக்கிக் கொள்ள முடியும்? என்ற விஷயத்தை பேசுவார்கள்.

மற்றொரு முரப்பி ஸாஹிப் எழுதுகின்றார்கள்: எங்களது பகுதியில் ஜமாஅத் அல்லாத மக்களுடன் அன்னாருக்கு நல்ல தொடர்புகள் இருந்தன. அன்னார் மரணமடைந்தபோது, மிகவும் தொலை தூரத்தில் இருந்தெல்லாம் மக்கள் இரங்கலை வெளிப்படுத்துவதற்காக வந்தார்கள். மேலும், இவர் எல்லாரையும் நேசிக்கக் கூடியவராக இருந்தார் என்றே அனைவரும் கூறினர். கஷ்டத்தின்போது அனைவருக்கும் உதவி செய்யக் கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் அன்னாருடைய பிள்ளைகளை தனது பாதுகாப்பில் வைப்பானாக.

இரண்டாவது ஜனாஸாவின் நற்குறிப்பு என்பது மலேசிய ஜமாஅத்தின் முபல்லிஃக் மதிப்பிற்குரிய மவ்லானா அப்துஸ் ஸத்தார் ஸாஹிப் அவர்களுடையதாகும்.

இவர்களும் கடந்த நாட்களில் 79-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

1973-ம் ஆண்டு, ஜனவரி 15 அன்று அன்னாருக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளக் கூடிய நற்பேறு கிடைத்தது. 1977 அக்டோபர் அன்று ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் சேர்ந்தார்கள். முபஷ்ஷிர் படிப்பை முழுமை செய்தார்கள். பல்வேறு நாடுகளில் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள். 1985-ம் ஆண்டு இந்தோனேஷியாவில் முபல்லிஃக் ஆக அன்னார் நியமிக்கப்பட்டார்கள். பின்னர் ஃபிஜி நாட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு சில வருடங்கள் இருந்தார்கள். பின்னர் அன்னார் மலேசியாவில் தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். மிகவும் தொண்டாற்றக் கூடியவராக இருந்தார்கள். அன்னாரின் உறவினர்களில் அன்னாரின் மனைவியும், ஒரு மகளும், இரண்டு மகன்களும் இருக்கின்றனர்.

அன்னாரை அறிந்தவர்கள் எழுதுகின்றார்கள்: ஜமாஅத்திற்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்கள். மேலும் ஜமாஅத் உறுப்பினர்களுக்கும் அன்னார் தியாகங்கள் செய்வதற்கும், ஜமாஅத்திற்காக தங்களை அர்ப்பணிப்பதற்கும் அறிவுரை நல்கி வந்தார்கள். மிகவும் அன்பு கொள்ளக் கூடியவராகவும், ஒவ்வொருவரின் பலவீனத்தையும் திரையிடக் கூடிய மனிதராகவும் இருந்தார்கள். தப்லீஃக் முயற்சிகளால் ஏராளமான மக்களுக்கு ஜமாஅத்தில் இணைவதற்கான நற்பேறு கிடைத்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பற்றி எப்போது குறிப்பிடப்பட்டாலும் அன்னாரின் கண்களில் கண்ணீர் வந்து விடும். மற்ற நாடுகளில் சென்று ஜமாஅத்திற்கு தொண்டாற்றும்படி கூறப்படும்போது தமது மனைவி மக்களை பின்னால் விட்டு விட்டு எந்த கவலையும் இன்றி சென்று விடுவார்கள். மேலும், ஜமாஅத்திற்காக தியாகம் செய்வதற்கு எப்போதும் தயாராக இருந்து வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அன்னாரின் பிள்ளைகளுக்கும் இந்த நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை அல்லாஹ் வழங்குவானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், ஜனவரி 10, 2025, பக்கம் 2 - 6)

தமிழாக்கம்

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * *

**12- ம் பக்கத் தொடர்ச்சி**
**குத்பா பேருரை 13.12.24**

ஜமாஅத் நிர்வாகத்தின் சார்பாக ஈரான் செல்லும்படி அன்னாருக்கு கட்டளை வழங்கப்பட்டது. அங்கு ஐந்து ஆண்டுகள் வரை மார்க்கத் தொண்டாற்றினார்கள். அதன் பிறகு காபூல், ஆஃப்கானிஸ்தான் செல்லும்படி கட்டளையிடப்பட்டது. காபூல் செல்வதற்காக குவைட்டாவில் இருந்தார்கள். அப்போது, நீங்கள் காதியானிற்கு அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்று அஹ்மதிய்யா ஜமாஅத் குவைட்டாவின் அமீர் ஸாஹிப் அன்னாரிடம் கூறினார்கள். நாட்டில் பிரிவினை ஏற்பட்ட காலமாக அது இருந்தது. இந்திய பாகிஸ்தான் பிரிவினை நிகழ்ந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்து லாஹூரில் தங்கி இருந்தார்கள். மவ்லவி ஸாஹிப் அவர்கள் லாஹூர் சென்றடைந்த போது, காதியான் செல்வதற்கான இது கடைசி வாகனம் இதோ சென்று கொண்டிருக்கின்றது; இதன் பிறகு அநேகமாக எந்த வண்டியும் செல்ல முடியாமல் போகலாம்; எனவே தாங்கள் காதியான் சென்று விடுங்கள் என்று அன்னாரிடம் கூறப்பட்டது. எனவே அன்னார் காதியானிற்கு திரும்பி வந்து காதியானின் பல்வேறு இடங்களில் பாதுகாப்புப் பணிகளை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழிகாட்டலின் கீழ் இந்தியாவில் தப்லீஃக் இடங்களில் முஅல்லிம்கள் அனுப்பப்பட்டபோது அன்னாரும் அனுப்பப்பட்டார்கள். உத்ரபிரதேஷம் ஜான்சிக்கு அன்னார் அனுப்பப்பட்டார்கள். அங்கு அன்னார் மிக அழகிய முறையில் தப்லீஃக் செய்தார்கள். மேலும் இந்துக்களுடனும் மிக நல்ல தொடர்பு வைத்திருந்தார்கள். கூறுகின்றார்கள்: ஒருமுறை ஒரு இந்து குருஜீ நோயுற்று விட்டார். அவருடைய சீடர் ஏதாவது மருந்து கொடுங்கள் என்று மவ்லவி ஸாஹிபிடம் கூறினார். அதற்கு, காலையில் வரும்படி அன்னார் கூறினார்கள். கூறுகின்றார்கள்: நான் துஆ செய்தபோது, இரவில் கனவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைக் கண்டேன். அன்னார் (ரலி) தமது மருந்துப் பெட்டியை திறந்தார்கள். மேலும், இந்த மருந்தை கொடுங்கள் என்று கூறினார்கள்.

மவ்லவி ஸாஹிப் மர்ஹூம் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் காலையில் கண்விழித்த போது, அந்த மருந்துக் குப்பி எனது கைகளில் இருந்தது. பின்னர் நான் அதிலிருந்து மூன்று வேளைக்கான மருந்தை குருஜீக்கு கொடுத்து விட்டேன். மேலும் அவரும் நலம் பெற்று விட்டார்.

இந்தியாவில் பல்வேறு இடங்களில் அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்துள்ளது. மேலும், இதற்கிடையிலேயே அன்னார் செயற்களத்திலிருந்து ஹோமியோபதிக்கான டிகிரியையும் பெற்றார்கள். ஏராளமான நற்பேறு பெற்ற மக்களுக்கு அன்னார் மூலமாக அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கான நற்பேறு கிடைத்துள்ளது.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.......)**

தமிழாக்கம்

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

# ஜுமுஆ பேருரை

**ஸரிய்யத்துல் குர்தாஃவின் சூழல்கள் மற்றும் சம்பவங்களைக் குறித்த விரிவான விளக்கம்**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒருநேரம் இவ்வாறு இருந்தது; அதாவது அப்போது முழு உலகிலும் தங்களின் இருப்பின் மீதும், தங்களுடைய மார்க்கத்தின் மீதும், தங்களுடைய நகரத்தின் மீதும் எனக்கு கடும் பகைமை இருந்தது. ஆனால், தற்போது எனக்கு தங்களின் இருப்பும், தங்களின் மார்க்கமும், தங்களுடைய நகரமும் எல்லாவற்றையும் விட மிகவும் நேசத்திற்குரியதாக ஆகிவிட்டது ( ஹஸ்ரத் ஸுமாமஃ பின் உஸால்)

மதிப்பிற்குரிய அப்துல் லத்தீஃப் கான் ஸாஹிப் & மதிப்பிற்குரிய மன்ஸுர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகன் ஷஹீத் தய்யப் அஹ்மது ஸாஹிப் & காஸா, பாலஸ்தீனைச் சேர்ந்த அன்பிற்குரிய முஹன்னத் முஅய்யத் காதியான் தர்வேஸான மவ்லவி அய்யூப் பட் ஸாஹிப்& டாக்டர் மஸுது அஹ்மது மலிக் ஸாஹிப் & மதிப்பிற்குரிய ஷபீர் அஹ்மது லூத்தீ ஸாஹிப் ஆகிய மர்ஹூம்களின் நற்குறிப்புகளும் ஜனாஸா ஹாழிர் மற்றும் காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 டிசம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **13 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.....**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒருநேரம் இவ்வாறு இருந்தது; அதாவது அப்போது முழு உலகிலும் தங்களின் இருப்பின் மீதும், தங்களுடைய மார்க்கத்தின் மீதும், தங்களுடைய நகரத்தின் மீதும் எனக்கு கடும் பகைமை இருந்தது. ஆனால், தற்போது எனக்கு தங்களின் இருப்பும், தங்களின் மார்க்கமும், தங்களுடைய நகரமும் எல்லாவற்றையும் விட மிகவும் நேசத்திற்குரியதாக ஆகிவிட்டது. அந்த நாள் மாலை வழக்கம்போல் ஸுமாமஃவிற்காக உணவு வந்தபோது, அவர் சிறிதளவு உணவை உண்டு விட்டு மீதம் வைத்து விட்டார். அதனால், ஸஹாபிகள் ஆச்சரியம் கொண்டனர்; காலை வரை ஸுமாமஃ மிக அதிகமாக உண்டு வந்தார்; கைது செய்யப்பட்டிருந்தார்; மேலும் கட்டப்பட்டிருந்தார்.

இதிலிருந்தும் இந்த விஷயம் நிரூபணமாகின்றது. அதாவது அவர் உணவு உண்ணக் கூடிய வகையில் கைதியாக்கப்பட்டிருந்தார். அவர் உணவு அருந்திக் கொள்ளும் வகையிலேயே அவர் கட்டப்பட்டிருந்தார். அவருக்கு நல்ல முறையில் உணவு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், தற்போது அவர் சிறிதளவு உணவு அருந்தினார். முன்னரோ அவர் சாப்பாட்டு ராமனைப் போன்று மிக அதிகமாக உணவு அருந்தி வந்தார். ஆனால், தற்போது அவர் மிகவும் குறைவாகவே உணவு அருந்தினார். அவர் ஒரு முஸ்லிமைப் போன்று உணவு உண்டார். மேலும்,ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு இவ்வாறு விளக்கமளித்தார்கள்; அதாவது, நிராகரிப்பாளர் ஏழு வயிறுகளால் உணவு உண்கிறார்; முஸ்லிம் ஒரு வயிறால் உணவு உண்கிறார்; அன்னாரின் கருத்து என்னவாக இருந்தது என்றால், எங்கு ஒரு நிராகரிப்பாளர் உலகியல் இன்பங்களில் தழைத்திருக்கின்றாரோ மேலும் ஒருவகையில் அதிலேயே மூழ்கி விடுகின்றாரோ அங்கு ஓர் உண்மையான முஸ்லிம் தமது உடல் தேவைகளை எந்த அளவிற்கு சுருக்கிக் கொள்கின்றார் என்றால் வாழ்க்கையை நிலை கொள்வதற்கு தேவையான வகையில் மட்டுமே அதனை ஆக்கிக் கொள்கின்றார். ஏனெனில், அவருக்கு உண்மையான இன்பம் என்பது மார்க்கத்தில் மட்டுமே கிடைக்கின்றது. இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும்; அதாவது, இந்த இடத்தில் ஏழு என்ற எண்ணிக்கை என்பது கணக்கீட்டின் அடிப்படையிலான எண்ணிக்கையை குறிக்காது. மாறாக, அரபி மொழியின் வழக்கின் அடிப்படையில் ஏழு என்ற எண்ணிக்கை அதிகமான மற்றும் பூர்த்தி செய்தலை வெளிப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஆக, கருத்து என்னவென்றால், ஒரு நிராகரிப்பாளர் என்பவர் உலகியல் இன்பங்களில் மூழ்கிக் கிடக்கின்றார்; மேலும், அவரது அனைத்து கவனமும் உலகத்தில் மட்டுமே இருக்கின்றது. ஆனால், ஒரு நம்பிக்கையாளர் தம்மைத் தாமே உலகியல் இன்பங்களில் இருந்து தடுத்து நிறுத்திக் கொள்கின்றார். மேலும், உண்மையான தேவைகளின் வட்டத்தை தாண்டி அவர் கடந்து செல்வதில்லை. ஏனெனில், அவரது இன்பத்திற்கான மைதானம் என்பது வேறொன்றாகும். இந்த போதனையானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயல்பின் தேட்டம் மற்றும் அன்னாருடைய தனிப்பட்ட நல்லொழுக்கத்திற்கு மிகவும் உண்மையான கண்ணாடி ஆகும்.

முஸ்லிம் ஆன பிறகு ஸுமாமஃ, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களுடைய ஆட்கள் என்னை சிறை பிடித்தபோது அந்த நேரத்தில் நான் கஅபத்துல்லாஹ்விற்கு உம்ரா செய்வதற்காக சென்று கொண்டிருந்தேன். தற்போது எனக்கு என்ன கட்டளை உள்ளது? என்று கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி நல்கினார்கள். மேலும் துஆ செய்தார்கள். மேலும் ஸுமாமஃ மக்காவை நோக்கிப் புறப்பட்டுச் சென்று விட்டார். அங்கு சென்றடைந்த ஸுமாமஃ ஈமானின் உத்வேகத்தில் இவ்வாறு கூறினார்;

தற்போது அவரது ஈமானின் உத்வேகம் முற்றிலும் வேறொரு வடிவத்தை மேற்கொண்டிருந்தது. எதிர்ப்பு எங்கே ? ஈமானின் உத்வேகம் எங்கே? மக்கா சென்றடைந்து அங்கு அவர், குறைஷியர்களுக்கு மத்தியில் பகிரங்கமாக தப்லீஃக்கை துவங்கிவிட்டிருந்தார். குறைஷியர்கள் இந்தக் காட்சியை கண்டனர். அப்போது, அவர்களின் கண்களில் இருந்து இரத்தம் வழிந்தது. மேலும், அவர்கள் ஸுமாமஃவை பிடித்து அவரை கொன்று விடுவதற்கு எண்ணம் கொண்டனர். ஆனால், அவர் யமாமாவின் பகுதியின் தலைவர் ஆவார்; மேலும், யமாமா பகுதியுடன் மக்காவிற்கு நெருங்கிய வணிகத் தொடர்புகள் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்து அவர்கள் அந்த எண்ணத்திலிருந்து விலகி விட்டனர். மேலும் ஸுமாமஃவை ஏசிபேசி விட்டு விட்டனர். ஆனால், ஸுமாமஃவின் இயல்பில் கடுமையான உத்வேகம் இருந்தது. மேலும்,ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அன்னாருடைய ஸஹாபிகள் மீதும் குறைஷியர்கள் இழைத்த அநீதிகள் அனைத்தும் ஸுமாமஃவின் கண்களுக்கு முன்னால் இருந்தன. அவர் மக்காவிலிருந்து புறப்பட்டவாறு குறைஷியர்களிடம் இவ்வாறு கூறினார்:

இறைவன் மீது ஆணையாக! இனி இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அனுமதி நல்காத வரை யமாமா பகுதியிலிருந்து உங்களுக்கு தானியங்களில் ஒரு தானியம் கூட உங்களுக்கு கிடைக்காது.

தமது நாட்டை சென்றடைந்து ஸுமாமஃ மக்காவிலிருந்து யமாமாவிற்கு வந்து செல்லும் வணிகக் குழுக்களின் போக்குவரத்தை தடுத்து நிறுத்தி விட்டார். மேலும், மக்காவின் உணவின் பெரும் பகுதி யமாமாவிலிருந்து வந்து கொண்டிருந்தது.எனவே இந்த வணிகம் தடைபட்டுப் போனதால் மக்கத்து குறைஷியர்கள் கடும் துன்பத்திற்கு ஆளாகி விட்டனர். தற்போது அதிக காலம் கழிந்திருக்கவில்லை. அதற்குள் அவர்கள் பதற்றமடைந்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்; தாங்கள் எப்போதும் உறவுகளை பேணுவதற்கு கட்டளை வழங்குகின்றீர்கள்; மேலும், நாங்கள் உங்களுடைய சகோதரர்கள் ஆவோம்; எங்களுக்கு இந்த துன்பத்திலிருந்து இரட்சிப்பு வழங்குங்கள் என்று கடிதம் எழுதினர்.

அந்நேரத்தில் மக்கத்து குறைஷியர்கள் எந்த அளவிற்கு அச்சமடைந்திருந்தனர் என்றால், அவர்கள் அந்த கடிதத்துடன் மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. மாறாக, தங்களது தலைவரான அபூ ஸுஃப்யான் பின் ஹர்பையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தனர். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி வாய்மொழியாகவும் மிகவும் புலம்பித் தவித்தார். மிகவும் கூச்சலிட்டார். மேலும், தங்களது துன்பங்களை வெளிப்படுத்தி கருணையை வேண்டினார். அதனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸுமாமஃ பின் உஸாலிற்கு இவ்வாறு வழிகாட்டல் அனுப்பினார்கள். அதாவது, மக்காவாசிகளின் உணவு பொருட்களை உள்ளடக்கிய குறைஷியர்களின் வணிகக் குழுக்களை தடுத்து நிறுத்த வேண்டாம் என்று வழிகாட்டல் வழங்கினார்கள்.

ஆக, அந்த வணிகத்தின் தொடர் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. மேலும் மக்காவாசிகளுக்கு அந்த துன்பத்திலிருந்து விடுதலை கிடைத்தது. இந்த சம்பவம் எங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தன்னிகரற்ற பரிவு மற்றும் கருணைக்கு ஒரு தெள்ளத் தெளிவான சான்றாக இருக்கின்றதோ அங்கு இந்த விஷயத்தையும் இது நிரூபணம் செய்கின்றது. அதாவது, தொடக்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறைஷியர்களின் வணிகக் குழுக்களை தடுத்து நிறுத்தும் தொடரை துவங்கியிருந்தார்கள் என்றால் அதன் அசல் நோக்கம் குறைஷியர்களை வறட்சியில் வீழ்த்தி அழித்து விட வேண்டும் என்பதாக இருக்கவில்லை. மாறாக அசல் நோக்கம் என்னவாக இருந்தது என்றால், மதீனாவின் சுற்றுப் பகுதிகள் குறைஷியர்களின் ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. இந்த சம்பவத்திலிருந்து இதற்கான சான்றும் கிடைக்கின்றது. அதாவது இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் போர் புரியும் எதிரி தொடர்பாக கூட இந்த விஷயம் விருப்பத்திற்குரியதாக இல்லை. அதாவது, பொதுவான நிலைமைகளில் எதிரியின் போக்குவரத்து தொடர்பை அவர் ரொட்டி மற்றும் உணவு தானியங்களில் இருந்து இழப்பிற்குரியவராக ஆகிவிடும் அளவிற்கு தடை செய்வதை இஸ்லாம் விரும்பவில்லை. உணவு மற்றும் குடிநீரை தடுப்பதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. ஆயினும், அவசியமான உணவுப் பொருட்களைத் தவிர்த்து ஏனைய பொருட்களின் போக்குவரத்தின் தொடரை போர் தேவைகளின் அடிப்படையில் தடை செய்து கொள்ள முடியும்.

ஆனால், இன்றைய உலகமோ விநோதமான வேடிக்கையை உருவாக்கிக் கொண்டுள்ளது. அதாவது, போரில் ஏழை மக்கள் வரை, அப்பாவி பொது மக்கள் வரை உணவுப் பொருட்களைக் கூட சென்றடைய விடுவதில்லை. மேலும், அங்கே தீவிரவாதிகள் இருந்தனர் அல்லது இன்ன இன்ன நபர் இருந்தார் என்று போலியான காரணங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். இது உலகவாதிகளாக இருக்கின்ற அந்த மக்களின் பணியாகும். ஆனால், இஸ்லாமிய போதனை இதுவன்று.எதிரி முஸ்லிம்களின் உணவுப் பொருட்களின் தொடரை தடுக்கும் சூழல் உருவானால், அதாவது எதிரி முஸ்லிம்களுடைய உணவுப் பொருட்களை தடுத்து நிறுத்தும் சூழலை உருவாக்கினால், பின்னர்,

جَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثۡلُهَا

என்ற திருக்குர்ஆனின் போதனையின்படி எதிரியின் தொடரையும் தடுத்து நிறுத்துவது ஆகுமானதாக இருக்கும். பழிக்குப் பழியாக அந்த செயல் அமையும்.

ஏற்கனவே மேலே கூறப்பட்டது போன்று, ஸுமாமஃ பின் உஸால் தனது பகுதியில் ஒரு செல்வாக்கு படைத்த தலைவராக இருந்தார். அவரது உத்வேகம் மிக்க தப்லீஃக்கின் மூலமாக யமாமாவை சேர்ந்த ஏராளமான மக்கள் இஸ்லாத்தை தழுவியிருந்தனர். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு அருகிலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் துவக்கத்திலும் முஸைலமா பின் கஸ்ஸாபிற்கு பின்னால் சென்று யமாமாவைச் சேர்ந்த ஏராளமான குடிமக்கள் இஸ்லாத்திலிருந்து முர்தத் ஆகிவிட்டனர். அப்போது ஸுமாமஃ அவர்கள் சுயமே உறுதிப்பாட்டுடன் இஸ்லாத்தில் நிலைபெற்றிருந்தார். இன்னும் கூறப்போனால், அவர் தமது பற்று மிக்க போராட்டத்தின் மூலமாக ஏராளமான மக்களை முஸைலமா கஸ்ஸாபுடைய தீங்கிலிருந்து பாதுகாத்து இஸ்லாத்தின் கொடியின் கீழ் ஒன்று கூட்டி விட்டார். மேலும் முஸைலமா கஸ்ஸாபுடைய குழப்பத்தை அழிப்பதற்காக சிறப்பான தொண்டுகளை ஆற்றினார். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 663 - 666)

இது இந்த ஸரிய்யாவின் முழுமையான குறிப்பாகும். இன்று நான் சிலருடைய ஜனாஸா தொழுகைகளையும் தொழ வைப்பேன். (இது தொடர்பாக, ஜனாஸா வந்து விட்டதா? என்று ஹுஸுர் அன்வர் அவர்கள் கேட்டார்கள். பின்னர் நேர்மறையான பதில் கிடைத்த போது ஹுஸுர் அன்வர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்)

ஹாழிர் ஜனாஸா மதிப்பிற்குரிய அப்துல் லத்தீஃப் கான் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் மிடில்செக்ஸ் மண்டலத்தின் ரீஜியனல் அமீரும் ஆவார்கள். டிசம்பர் 11-ம் தேதி 85-வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் முஹம்மத் ஸஹுர் கான் ஸாஹிப் பட்டியால்வி (ரலி) அவர்களின் மகனும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் மருத்துவருமான டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் மருமகனும் ஆவார்கள். டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்களின் மருத்துவராக இருந்தார்கள். அப்துல் லத்தீஃப் கான் ஸாஹிப் அவர்கள் யூ.கே ஜமாஅத்தின் ஆரம்ப கால உறுப்பினர் ஆவார்கள். 55 வருடங்கள் வரை அன்னாருக்கு உள்ளூர் அளவிலும், தலைமையக அளவிலும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. ஹன்ஸ்லூ ஜமாஅத்தின் முதல் ஸதர் ஜமாஅத் ஆக அன்னார் இருந்தார்கள். இது மட்டுமின்றி தேசிய அளவில் செகரட்டரி வஸாயா ஆகவும், செகரட்டரி ரிஷ்தா நாதா ஆகவும், ரீஜினல் அமீர் ஆகவும் அன்னார் தொண்டாற்றி கொண்டிருந்தார்கள்.

மர்ஹூம் தொழுகை, நோன்பு ஆகியவற்றை பேணி வந்தார்கள். நற்பண்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். அனுதாபம் கொண்டவராகவும், நல்லமுறையில் பழகுபவராகவும், அழகிய முறையில் உரையாடக் கூடியவராகவும், கடின உழைப்பாளியாகவும், கட்டுப்பட்டு நடக்கக் கூடிய நல்ல மற்றும் தூய மனிதராகவும் அன்னார் இருந்தார்கள். கிலாஃபத்துடனும் மிகவும் ஆழமான மற்றும் உறுதியான தொடர்பு இருந்தது. பற்று மிக்க தொடர்பு இருந்தது. ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு எந்நேரமும் ஆயத்தமாக இருந்தார்கள். தமது மண்டலத்தில் கட்டப்பட்ட அனைத்து பள்ளிவாசல்களுக்காகவும் நன்கொடை வசூல் செய்வதில் முக்கிய பங்காற்றினார்கள். தப்லீஃக் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது. ஹன்ஸ்லூ பகுதியில் இந்துக்கள் மற்றும் சீக்கியர்களுடன் நல்ல தொடர்புகளை வைத்திருந்தார்கள். மேலும் எப்போதும் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் பெரும் எண்ணிக்கையில் அவர்களை அழைத்து வந்தார்கள். மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னார் பின்விட்டுச் சென்ற உறவினர்களில் இரண்டு மகள்களும், நான்கு மகன்களும் இருக்கின்றனர். அன்னாருடைய மகனும் ஜமாஅத் பணிகளை செய்து வருகின்றார். ஏராளமான மகன்வழிப் பேரன்களும், பேத்திகளும், மகள் வழிப் பேரன்களும், பேத்திகளும் இருக்கின்றனர். அன்னாரின் குடும்பம் மிக நல்ல குடும்பம் ஆகும். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் சந்ததியினருக்கும் நன்றியுணர்வுடன் கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் தொடர்பு வைப்பவர்களாக இருக்கட்டுமாக!

! இரண்டாவது ஜனாஸா காயிப் ஜனாஸா ஆகும். அது ராவல்பிண்டியைச் சேர்ந்த மன்ஸுர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகன் ஷஹீத் தய்யப் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாகும். தய்யப் அஹ்மத் ஸாஹிப் அவர்களை ஜமாஅத்தின் ஓர் எதிரி ராவல்பிண்டியில் டிசம்பர் 5-ம் தேதி கோடாரியால் தாக்கி ஷஹீதாக்கி விட்டான்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

கிடைத்த விபரங்களுக்கு ஏற்ப ஷஹீத் தய்யப் அஹ்மத் ஸாஹிப் சில நாட்களுக்கு முன்னர் ராஜன்பூரிலிருந்து ரவால்பிண்டிக்கு தமது சகோதரர் தாஹிர் அஹ்மத் கமர் ஸாஹிப் அவர்களுக்கு வியாபாரத்தில் உதவி செய்வதற்காக சென்றிருந்தார்கள். ஷஹீத் மர்ஹூம் தமது சகோதரரின் கடையில்






**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

அமர்ந்திருந்தார்கள்; அப்போது, ஒருவன் அங்கு வந்தான்; மேலும் அவன் ஷஹீது மர்ஹூம் உடன் தர்க்கம் செய்ய துவங்கி விட்டான். நீங்கள் என்னுடன் ஏன் வீணாக சண்டையிடுகின்றீர்கள்? நானோ இங்கு விருந்தினராக இருக்கின்றேன் என்று ஷஹீது மர்ஹூம் அவர்கள் மேற்குறிப்பிட்ட நபரிடம் கூறினார்கள். அதன் பிறகும் கூட தாக்குதல் தொடுத்தவன் அதனை பொருட்படுத்தவில்லை. மேலும் தலை, கழுத்து மற்றும் முதுகில் கோடாளியைக் கொண்டு தாக்கினான். அதனால் தய்யப் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் நிகழ்விடத்திலேயே ஷஹீத் ஆகிவிட்டார்கள். அப்போது நிகழ்விடத்திலிருந்து சற்று தொலைவில் இருந்த தாஹிர் அஹ்மத் ஸாஹிப் கமர் அவர்கள் தமது சகோதரரின் உதவிக்காக அங்கு வந்தடைந்தார்கள். அப்போது தாக்குதல் தொடுத்தவன் அன்னாரை நோக்கியும் கோடாளியை எடுத்துக் கொண்டு முன்னேறினான். எவ்வாறு இருப்பினும், அன்னார் மிகவும் கஷ்டப்பட்டு தமது உயிரை காப்பாற்றிக் கொண்டார்கள். மேலும் இந்த சம்பவத்தின் போது கொலையாளி ஜமாஅத்திற்கு எதிரான முழக்கங்களை முழங்கிக் கொண்டிருந்தான். மேலும், அவன் கூறினான்: காதியானிகளே! இந்தப் பகுதியை விட்டு விடுங்கள் என்று உங்களுக்கு பல முறை கூறினோம்.

எவ்வாறு இருப்பினும், இந்த தாக்குதலை நடத்திவிட்டு சம்பவத்திற்கு பிறகு கொலையாளி தப்பியோடி விட்டான். எனினும், காவல்துறை கொலையாளியை கைது செய்து இருக்கின்றது. இனி பார்ப்போம்; வழக்கு எங்கு வரை செல்கின்றது?

ஷஹீது மர்ஹூம் அவர்களின் சகோதரர் தாஹிர் அஹ்மதும், குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களும் வியாபாரம் தொடர்பாக ராவல்பிண்டியில் தங்கியிருக்கின்றனர். மேலும் கூறுகின்றனர்: கடந்த ஒரு வருடத்தில் எதிர்ப்பின் சூழல்கள் மற்றும் மிரட்டல்களின் அடிப்படையில் அந்தக் குடும்பத்திற்கு நான்கு முறை வியாபாரத்திற்கான இடத்தை மாற்ற வேண்டியது நேரிட்டது. மூன்று மாதம் முன்பு அவர்கள் குடியிருந்த வீட்டிலிருந்தும் காலி செய்ய வைக்கப்பட்டார்கள். பலமுறை எதிரிகளின் புறமிருந்து கல்வீச்சையும், வியாபார நஷ்டங்களையும் எதிர் கொள்ள நேரிட்டது. அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களுக்கு எதிரான புகாரின் மீது போலீஸ் புறமிருந்தும் அவர்கள் அழைக்கப்பட்டு வந்தார்கள்.இந்த அனைத்து நிலைமைகளையும் அன்னார் மிகவும் தைரியமாக எதிர் கொண்டார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்களின் குடும்பத்தில் காதியானைச் சேர்ந்த அன்னாரின் கொள்ளு தாத்தா உமருத்தீன் ஸாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. ஷஹீது மர்ஹூம் அவர்களின் பாட்டனார் தாவூத் அஹ்மத் கான் ஸாஹிப் அவர்களுக்கு மினாரத்துல் மஸீஹ் உடைய கட்டுமானத்தில் மேஸ்தரி என்ற ரீதியில் தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்தது. புர்கான் பட்டாலியனிலும் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்துள்ளது. பாகிஸ்தான் உருவான நேரத்தில் ஹிஜ்ரத் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய பயணக் குழுவிலும் அன்னார் இடம் பெற்றிருந்தார்கள். அன்னார் பாகிஸ்தானிற்கு வந்து ரஹீம் யார்கான் மாவட்டம் கந்தார்ஸிங் எனும் இடத்தில் ஜமாஅத்தை நிறுவினார்கள். மேலும், ஜமாஅத் ஸதராக தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். மேலும், பைத்துத் திக்ர் அஹ்மதிய்யா பள்ளிவாசலின் கட்டுமானத்தில் முக்கிய பங்களிப்பு நல்கினார்கள்.

ஷஹீத் நோயின் காரணமாக கல்வி கற்க முடியவில்லை. எனினும், எழுதப் படிக்க அறிந்திருந்தார்கள். எளிமையான இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். விவசாயம் மற்றும் கடும் உழைப்பை் கொண்ட தொழிலை செய்யக் கூடியவராக இருந்தார்கள். ஷஹீது ஐவேளை தொழுகை மற்றும் தஹஜ்ஜுத் தொழுகையை பேணக் கூடியவராக இருந்தார்கள். குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தொழுகைகளை நிறைவேற்றுவதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். கிலாஃபத்துடன் எல்லையற்ற நேசமும், பெற்றோர்களுக்கு மிக அதிகமாக சேவையும் செய்து வந்தார்கள். உறவினர்கள் மீதான அனுதாப உணர்வு தனித்தன்மையாக இருந்தது. ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவதற்கு சிறப்பான ஏற்பாடு செய்து வந்தார்கள். துவக்க நேரத்திலேயே மஸ்ஜிதிற்கு சென்று விடுவார்கள். ஷஹீது மர்ஹூமுடைய தகப்பனார் மன்ஸூர் அஹ்மது ஸாஹிப் கூறினார்கள்: சிறிய வயதில் ஒருமுறை ஷஹீது அவர்கள் இஷா தொழுகையை நிறைவேற்றாமலேயே தூங்கி விட்டார்கள். கனவில் ஷஹீது இவ்வாறு கண்டார்: அதாவது யாரோ ஒருவர் அன்னாரை கடுமையுடன் எழுப்பினார்; மேலும், ஏன் தொழவில்லை? என்று அவர் கூறினார். கூறுகின்றார்கள்: அதன் பிறகு ஷஹீது ஒருபோதும் ஒரு தொழுகையைக் கூட விட்டு விடவில்லை. இன்னும் கூறப்போனால், தஹஜ்ஜுத் தொழுகையை பேணக் கூடியவராக இருந்தார்கள். அன்னாரின் துணைவியார் கஸ்ஸாலா ஸாஹிபா கூறுகின்றார்கள்: ஐந்து, ஆறு வருடத்திற்கு முன்னர் திருமணம் நிகழ்ந்தது. மேலும், எனக்கு அன்னார் குறிப்பாக எந்த விஷயத்தை எப்போதும் அறிவுரையாக செய்து வந்தார்கள் என்றால், தொழுகையை முறையாக நிறைவேற்றி வாருங்கள் என்பதாகவே இருந்தது.

மாவட்ட முரப்பி மஹ்மூத் அஹ்மத் ரந்த் ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஷஹீது மர்ஹூம் முதல் சந்திப்பின்போது இவ்வாறு கூறினார்: நான் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு எந்நேரமும் தயாரக இருக்கின்றேன். ஒருவேளை எனது தேவை ஏற்பட்டால் கண்டிப்பாக எனக்கு கூறுங்கள். ஷஹீது மர்ஹூம் வாழ்வை அர்ப்பணித்தவர்களுடன் மிக அதிகமாக நேசம் கொள்ளக் கூடியவராகவும், எளிய இயல்பு படைத்தவராகவும், குறைவாக பேசக் கூடியவராகவும் இருந்தார்கள். மஸ்ஜிதிற்கு வரும்போது, சுன்னத்துகளை தொழுத பிறகு திக்ரே இலாஹியில் மும்முரமாகி விடுவார்கள். மர்ஹூம் தமக்குப் பின்னர் விட்டுச் சென்ற உறவினர்களில் தந்தையாரும், தாய் மக்ஸூதா பி.பி ஸாஹிபா அவர்களும், துணைவியார் கஸ்ஸாலா ஸாஹிபாவும், இரண்டு சகோரர்களும் இருக்கின்றனர்.

அன்னாரின் ஒரு சகோதரர் வக்ஃபே ஜதீத் முஅல்லிம் ஆவார்கள். மர்ஹூம் அவர்களுக்கு பிள்ளைகள் யாரும் இல்லை. இதேபோன்று மர்ஹூமிற்கு இரண்டு உடன் பிறந்த சகோதரிகளும் உள்ளனர். அல்லாஹ் ஷஹீது மர்ஹூம் அவர்களுடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக! மேலும், அனைத்து உறவினர்களுக்கும் அழகிய பொறுமையை மேற்கொள்வதற்கு அருள் செய்வானாக!

இரண்டாவது ஜனாஸா காயிப் என்பது காஸா, பாலஸ்தீனைச் சேர்ந்த முஹன்னத் முஅய்யத் அவர்களுடையதாகும். இவர்களும் ஒரு டிரோன் தாக்குதலில் 20 வயதில் ஷஹீது ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡنَ

அமீர் கபாபீர் ஷரீஃப் ஓதே ஸாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: முஹன்னத் முஅய்யத் அபூ அவாத் 20 வயதான வெட்க உணர்வு கொண்ட, குறைவாக பேசக் கூடிய மற்றும் போர் சூழல்களுக்கு மத்தியிலும் எப்போதும் புன்சிரிப்போடு இருக்கக் கூடிய இளைஞர் ஆவார். அவர் தனது பெற்றோருடன் காஸாவின் தெற்குப் பகுதியில் கான் யூனூஸ் என்ற இடத்திற்கு அருகில் மனிதம் முதலில் அமைப்பின் முகாம்களில் ஒரு முகாமில் தங்கி வந்தார். மனிதம் முதலில் அமைப்பில் இவரும் தொண்டாற்றி வந்தார். அங்கும் மக்களுக்கு தொண்டாற்றி வந்தார். தாம் மட்டும் முகாமில் தங்கிவரவில்லை. இன்னும் கூறப்போனால், மனிதம் முதலில் அமைப்பைச் சார்ந்தவர்கள் கூறுகின்றார்கள்: இவர் எங்களது மிகச் சிறந்த ஊழியராக இருந்தார்.

அவரது குடும்பத்தில் அவரது தந்தை முஅய்யத் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 2009 அல்லது 2010-ல் தமது குடும்பத்துடன் பைஅத் செய்திருந்தார்கள். மர்ஹூம் முஹன்னத் அவர்கள் முன்னர் கூறியது போன்று தமது குடும்த்தில் துன்பம் மற்றும் தேவைகளை உணர்ந்தார்கள். மேலும் அதனை அகற்றுவதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். உண்பதற்கு அந்தப் பகுதியில் எதுவும் இருக்கவில்லை. எனவே அங்கு எங்கிருந்தாவது உணவின் ஒரு கவளம் கிடைத்துவிட்டால் அது ஒரு அருட்கொடைக்கு குறைவானதாக இருக்கவில்லை. இன்றைய நாட்களில் அங்கு நிலைமை மிகவும் படுமோசமாக உள்ளது. இஸ்ரேல் அரசாங்கம் உணவுப்

Proprietor off : 044- 2260 1886
**RAZIK XEROX & TELECOM**
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 30 JANUARY 2025 Issue No 5

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

பொருட்கள் எடுத்துச் செல்வதற்கு தடைவிதித்து விட்டது. நிவாரண உதவிகளை எடுத்துக் கொண்டு செல்கின்ற டிரக்குகள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. ஷஹாதத் நேரத்திற்கு சிறிது முன்னர் முஹன்னத் காஸாவிற்கு தெற்கில் ரஃபா பகுதியில் உணவைத் தேடி சென்றார். அந்தப் பகுதியில் உணவிற்கான நிவாரண உதவிப் பொருட்களை எடுத்துக் கொண்டு வண்டிகள் கடந்து செல்கின்றன. ஆனால், பெரும்பாலும் அவற்றின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு எல்லாவற்றையும் அழித்து விடுகின்றனர். அல்லது கொள்ளையடிக்கப்பட்டு விடுகின்றது. சிலநேரங்களில் இங்கு மண் கலந்த கோதுமை மாவு கிடைத்து விடுகின்றது. கிடைக்கின்றது என்றாலும் கூட அது மண் கலந்த கோதுமை மாவாக இருக்கின்றது.ஆயினும், இது கூட அவர்களுக்கு ஒரு அசாதாரண அருட்கொடையாக இருக்கின்றது.

முஹன்னத் ஒருமுறை அங்கு சென்றார் ; அப்போது நல்வாய்ப்பாக அங்கு அவருக்கு தமது குடும்பத்தினர் மற்றும் அண்டை அயலாருக்கான சிறிதளவு கோதுமை மாவு கிடைத்து விட்டது. அவர் வீடு திரும்பி விட்டார். பல மக்கள் இதன் மூலமாக உயிர் பிழைப்பார்கள் என்று தாயாரும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஆயினும், மீண்டும் அங்கு செல்ல வேண்டாம் என்று அவரது தந்தையார் அவரை கண்டித்தார். ஏனெனில், அங்கு சென்று திரும்பி வருவது என்பது ஓர் அற்புதத்திற்கு குறைவானதாக இருக்கவில்லை. நீ இன்னும் இளைஞன் ஆவாய்; வாழ்வில் இன்னும் நிறைய பணிகள் ஆற்ற வேண்டியது இருக்கின்றது. எனவே நீ அங்கு சில கிலோகிராம் கோதுமை மாவிற்காக அங்கு செல்வதும், உனது உயிரை ஆபத்தில் ஆழ்த்திக் கொள்வதும் எவ்வகையிலும் அறிவுப்பூர்வமான முடிவு கிடையாது என்று கூறினார். எவ்வாறு இருப்பினும், டிசம்பர் 2, 3 தேதிகளில் மீண்டும் தமது நண்பர்களுடன் உணவைத் தேடி அங்கு சென்று விட்டார். அவர் அந்தப் பகுதியில் சென்றபோது அங்கு ஒரு பாலஸ்தீன சகோதரரின் சலடத்தைக் கண்டார்; அக்கம் பக்கத்தில் சில தெரு நாய்கள் சடலத்தை தின்று கொண்டிருந்தன. எனவே அவர்களுக்கு மிகவும் வேதனை ஏற்பட்டது. அவர்கள் அசல் நோக்கத்தை மறந்து விட்டனர்; மேலும் அவர்கள் சடலத்தை தூக்கினர்; மேலும் அங்கிருந்து அதனை ஒரு பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சேர்த்து அடக்கம் செய்வதற்காக ஒரு ஆம்புலன்ஸ் வரை கொண்டு சேர்த்தனர். இதற்கிடையில் அவர்கள் மேலும் ஒரு காயமுற்ற பெண்மணி மற்றும் அவரது மகளின் கூக்குரலை செவியுற்றனர். அவர்கள் உதவிக்காக அழைத்துக் கொண்டிருந்தனர். அவர்களும் காயமுற்றிருந்தனர். இந்த மூவரும், சடலத்தை ஆம்புலன்ஸ் வரை கொண்டு சேர்த்து விட்டு ஸ்டெரச்சர் எடுத்துக் கொண்டு தாயையும், மகளையும் கொண்டு செல்வதற்காக திரும்பி வந்து விட்டனர். தற்போது ஒரு காயமுற்ற நபரை எடுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தனர். அப்போது இஸ்ரேலிய விமானங்கள் திடீரென அவர்கள் மீது ஏவுகணைகளை வீசிவிட்டன. முஹன்னதும் அவரது ஒரு தோழரும் மற்றும் காயமுற்ற இரண்டு பெண்களும் நிகழ்விடத்திலேயே ஷஹீதாகி விட்டனர். மூன்றாவது தோழர் உயிர் பிழைத்து விட்டார். அவர் வேதனை மிகுந்த அனைத்து நிகழ்வுகளையும் எடுத்துரைத்தார். மேலும் கூறுகின்றார்கள்: முஹன்னத் மற்றும் அவரது தோழர்களின் சடலத்தை எடுத்து வருவதற்காக எவரெல்லாம் சென்றார்களோ அவர்களும் அங்கேயே கொல்லப்பட்டு விட்டனர். இதனாலும் மிகுந்த வேதனை ஏற்பட்டுள்ளது.

இறுதியில் அவர்களுடைய சடலத்தை ஒரு நாள் முன்பு, நேற்று ஒரு மருத்துவ மனையில் இருந்து கிடைத்துள்ளது.

ஷஹீது அவர்களுடைய தந்தையார் முஅய்யத் ஸாஹிப் ஜமாஅத்தின் மிகவும் தூய மற்றும் பணிவு மிக்க உறுப்பினர் ஆவார்கள். அன்னார் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்காக எப்போதும் பணியை தேடிக் கொண்டிருப்பார்கள். இங்கு மனிதம் முதலில் அமைப்பின் முகாமிலும் தொழுகைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட இடத்தை வேறு எவரையும் சுத்தம் செய்ய அனுமதிக்க மாட்டார்கள். மாறாக, சுயமே சுத்தம் செய்து வந்தார்கள். எப்போதும், தூய மனதுடனும், நேர்மையுடனும் பணி செய்வார்கள்.

அன்னாரின் தந்தையாருக்கும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு ஏராளமான துன்பங்களை எதிர்கொள்ள நேரிட்டது. மேலும் அன்னாரோ மிகவும் தைரியம் மிக்க நபராக இருந்தார்கள். எனவே பல்வேறு மஸ்ஜித்களில் சென்று மஸீஹ் வந்து விட்டார் என்று மிகவும் உரத்தக் குரலில் அறிவிப்பு செய்து வந்தார்கள். பெரும்பாலும் இதன் காரணமாக அவர்களுக்கு அடிதடியை எதிர்கொள்ள நேரிட்டது. இன்னும் கூறப்போனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது ஈமான் கொண்டதன் விளைவாக உள்ளூர் அரசாங்கம் அவர்கள் மீது மார்க்கத்திலிருந்து விலகியவர் என்ற குற்றச்சாட்டுகளை சுமத்தி பல,பல வாரங்கள் வரை சிறையில் அடைத்து வைத்தது. ஆனால், அன்னார் இந்த அனைத்து துன்பங்களின்போதும் உறுதியுடன் இருந்தார்கள். அவர்களின் ஈமானில் அணுஅளவும் குறைவு ஏற்படவில்லை.

கைது செய்தபோது, ஓர் அதிகாரி அன்னாரின் காதில் ஓங்கி அறைந்து விட்டார். அதன் பிறகு அவர்களால் அந்த காதால் எதனையும் செவியேற்க முடியாமல் போய்விட்டது. எவ்வாறு இருப்பினும், ஷஹீது மர்ஹூம் அவர்களுடைய தந்தையும் பெரும் தியாகங்களை செய்துள்ளார்கள். அந்தக் குடும்பம் ஜமாஅத்திற்காக மற்றும் தமது ஈமானிற்காக பெரும் தியாகங்களை செய்துள்ளது. அல்லாஹ் அவர்களை எதிர்காலத்தில் எல்லா தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பானாக! மேலும் ஷஹீது மர்ஹூம் அவர்களுடைய அந்தஸ்தையும் உயர்த்துவானாக!

அடுத்த ஜனாஸா காதியான் தர்வேஸான மவ்லவி அய்யூப் பட் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் 100-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அய்யூப் பட் ஸாஹிப் தமது ஒரு வாக்குமூலத்தை இவ்வாறு எழுத வைத்துள்ளார்கள்; அதாவது, அன்னாரின் தாயார் மதிப்பிற்குரிய கரீம் பி.பி ஸாஹிபா அவர்கள் மூலமாக தமது குடும்பத்தில் அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் மீர்பூர் காஷ்மீரைச் சார்ந்தவராக இருந்தார். அன்னாரின் ஒரு சகோதரர் ஸய்யத் அர்ஷத் அலி ஸாஹிப் காதியானிலிருந்து கல்வி பயின்று சென்றிருந்தார்கள். அன்னாரின் தப்லீஃக்கின் மூலமாக தாயார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். பின்னர் தந்தையாரும் பைஅத் செய்து விட்டார்கள். அய்யூப் பட் ஸாஹிப் தர்வேஷ் அவர்களுடைய எழுத்துக்கேற்ப மர்ஹூம் இளைமைப் பருவத்தில் கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை குதிரையில் சவாரி செய்வதாக கண்டார்கள். இந்தக் கனவின் விளக்கத்தை அன்னாரின் தாயார் இவ்வாறு கூறினார்கள்: அன்னாருக்கு அல்லாஹ் மார்க்கப் பணிகளை செய்வதற்கான நற்பேறை வழங்குவான். 1939-ல் மவ்லவி ஸாஹிப் தமது வாழ்வை மார்க்கத்திற்காக அர்ப்பணித்து விட்டார்கள். மேலும்

இதன் தொடர்ச்சி 8- பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad